பாரியைக் கொன்றவர் யார்?

(முதலிய சில கட்டுரைகள்)

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURA TAMIL SANGAM

வித்துவான், ஆ. சிவலிங்கனார்.

(விரிவுரையாளர், சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ்க் கல்லூரி, மயிலம்.)

*

ஒற்றுமை ஆபீஸ்,

தியாகராய நகர் :: சென்னை.

காப்பிரைட்] 1949 [விலை ரூ. 1/-

Printed at
Sri Bharathi Press, Choolai, Madras.

Price Re. 1.

முகவுரை.

தாய்த்தண்டமிழ் நாட்டிற்பெருந் தக்கோர்பலர் முன்னே
போய்த்தங்குதற் கேற்றம்மிகப் போற்றப்பெறுங் கல்வி
எய்த்தந்துநன் னெறிசேர்ந்திட என்னையருள் செய்த
தாய்த்தந்தையர் தாட்டாமரை தாழாதிறைஞ் சுவனே.

எங்கள் **சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி**யில், புலவர் வகுப்பிற்கு, இவ்வாண்டில் (1948-49) 'புறநானூறு' நடத்தும் பேறுபெற்றேம். அதற்காக ஆழ்ந்து படிக்குங்கால், சிலகருத்துக்கள் தோன்றி மனதை மகிழ்வித்தன. சில ஐயங்களும் தோன்றின. தோன்றிய ஐயங்களை ஒருவாறு தெளியலானேம். எமது தெளிவு அறிஞர்கட்கு எவ்வாறுமோ அறியேம். தோன்றிய கருத்துக்களும், ஐயங்களும், தெளிவுகளுமே ஈண்டு 'பாரியைக் கொன்றவர் யார்' முதலிய கட்டுரைகளாக வெளிவருகின்றன.

மயிலம்.
20-10-'48

ஆ. சி.

1. பாரியைக்கொன்றவர் யார்?

இவ்வினாவைக் கபிலரிடந்தான் கேட்க வேண்டும். பாரியின் உயிர்த்தோழர் கபிலர். பாரி உயிர் நீத்த காலத்தும் உடனிருந்தவர். பாரிக்குப் பின்னர் அவனது பெண்மக்கள் இருவரைப் போற்றிவந்தவர். பாரி யிறந்ததற்காக வருந்திய வருத்தம் சொல்லுந்தரத்ததன்று. பாரியின் மலையாகிய பறம்பினையும், பறம்பு நாட்டினையும் காணுந்தோறும் காணுந்தோறும், பாரியை யிழந்து அவை பொலிவற்றிருப்பதற்கு மனம் வருந்தியவர். பாரியிடம் செப்பரும் நட்பினராக இருந்தவர் கபிலர். ஆதலினால் இவ்வினாவை அவரிடம் வினவவேண்டும் என்றோம்.

இவ்வினாவிற்கு அவர் என்ன விடையளிப்பாரோ? ஒருவேளை விடையிறுக்காமல் நிலங்கவிழ்ந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் விடவும் செய்வார் என எண்ணுகின்றோம். பாரியின் புகழ் கூற வந்து, பாரிக்கே தீங்கு விளையக் காரணராயிருந்து விட்டவர் அவர் அன்றோ? படிக்கும் அன்பர்கள் திடுக்கிடலாம். உண்மைதான். யாமும் அப்படித்தான் திடுக்கிட்டோம். எப்போது? பிறர் சொல்லிய காலத்துக் கேட்ட பொழுதன்று. கபிலரது வாக்கைக் கண்ட பொழுதே. எங்கு கண்டேம்?....இதோ அவரது வாக்கு:—

கடந்தடு தானை மூவிரும் கூடி
உடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்

யாமும் பாரியும் உளமே
குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே.

(புறம் 110)

கபிலரின் வாக்காம் இப்பாடலைக் காண்மின். இப்பாடல் வரவேண்டிய காரணத்தைக் காண்பாம்.

பறம்பு நாட்டிற்குரியவன் பாரி. சிறந்த கொடை வள்ளல். "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினும் கொடுப்பாரிலை" எனப் பிற்காலத்துச் சுந்தர மூர்த்தி நாயனாரால் புகழப்படும் பெருமை பெற்றவன். அக்காலத்து மூவேந்தர் புகழையும் தன்புகழால் கீழாகக் கண்டவன். அதனால் மூவேந்தரும் இவனிடம் பொறாமைகொண்டு இவனை வெல்லக்கருதியிருந்தனர்.

பாரிக்கு இரண்டு பெண்மக்கள் இருந்தனர். மூவேந்தர்களும் அம்மக்களை மணம் பேசி விடுத்தனர். பாரி, வேந்தர்கள் மூவராதலின் தன் மக்களிருவரை ஒருவற்கே கொடுத்துவிடின் மற்றைய இருவர்க்கும் சினம் மூளும், அல்லது இருவர்க்குக் கொடுத்துவிடின் ஒருவனுக்குச் சினம் மூளும் என்று எண்ணியோ, பிறகாரணங் கருதியோ மணஞ்செய்து கொடுக்க மறுத்தான். இயற்கையில் உருள்கின்ற ஒரு உருளையைக் குறுந்தடி கொண்டு அடித்தது போலத் தன் புகழால் தமது புகழைக் கீழ்ப்படுத்திய காரணத்தால் பாரிபால் இருந்த பகைமை, மகளை மணஞ்செய்து கொடுக்க மறுத்ததால் பின்னும் பெருகுவதாயிற்று எனவே மூவேந்தர்களும் பாரியால் தனித்தனிப் பொருது தோற்றுப் பின்னர் ஒன்று கூடிப் பொருதற்குப் பறம்பு நாட்டினை முற்றுகை யிட்டனர். அது போது மேலே குறித்த "கடந்தடுதானை" என்ற பாட

லக் கூறினார் கபிலர். மூவேந்தர்களும் தனித்தனியாகப் பொருத காலத்திலும் அவர்களிடம் பாரியை வெல்வதற்குரிய வழியினைக் கூறியுள்ளார். பாரியை வென்று அவர்கள் உயர்வடைவர் எனக் கனவிலும் கருதினாரல்லர் கபிலர். தோற்பர் என்றே உறுதியாக எண்ணினார். அதனால் பின்வருமாறு மொழிந்தார்.

“நீவிர் மூவரும் பாரியது பறம்பினைக் கொள்ள நினைப்பீர்களாயின் நுங்களால் வென்றுகொளற் கரிதாகும். நீவிர் மரந்தொறும் பிணித்த களிற்றினராகலாம்; புலந்தொறும் பரப்பிய தேரினராகலாம். நீங்கள் முயற்சியாலோ, வாட்போராலோ பறம்பினைக் கொள்ளுதல் அரிது. அதனைக் கொள்ளுதற்குரிய வழியினை யான் அறிவேன். நீவிர் யாழினைக் கைக்கொண்டு நும் உரிமை மகளிராகிய விறலியர் பின்வர, ஆடியும் அவன் புகழ் பாடியும் சென்றால் அவன் நாட்டையும் மலையையும் ஒருங்கு ஈவன். இதுவே பறம்பினைக் கொள்ளுதற் குரிய வழி”

(புறம் 109)

இங்ஙனம் கபிலர் கூறவே, மூவேந்தரும் பாரிபால் இரக்க நாணினவர்களாய் ஒருங்கு கூடிப் பறம்பினைச் சூழ்ந்து முற்றுகை யிட்டனர். அதன் பின்னரே “கடந்தடுதானை” என்ற பாடலைக் கூறும் போது “ஆடினிர் பாடினிர் செலின், நாடும் குன்றும் ஒருங்கீயும்மே” என்றார். ஆனால் மூவேந்தரும் ஒருங்கு கூடி முற்றுகையிட்டபோது, “முந்நூறூரும் பரிசிலர் பெற்றனர், யாமும் பாரியும் உளமே, குன்றும் உண்டு நீர் பாடினிர் செலினே” என்றார். எனவே மூவரும் கூடி முற்றுகை யிடுவதற்குள் பறம்பு நாட்

டைச் சார்ந்த முந்நூறு ஊர்களும் பரிசிலர்க்கு வழங்கப்பட்டு விட்டன என்பது போதரும். இதனால் "மூவேந்தராகிய நீவிர் பாடிச்சென்ருல் அவன் தனது மலையினைத்தருவது உறுதி" யென்பதற்குச் சான்று காட்டினுர் எனக் கொள்ளலாம். இங்ஙனமாக ஒரு முறைக்கு இரு முறையாகக் கூறிய கபிலரின் வாக்கினை மூவேந்தரும் ஆய்வா ராயினர். "பாரிபால் நாம் இரந்து சென்ருல் நமக்கு இகழ்ச்சியும் அவனுக்குப் புகழ்ச்சியும் அன்ரே விளையும்? நமக்கு இகழ்ச்சி வரின் அவன் உயிருடன் இருத்தலாகாது. இதற்கென் செய்வது? அவனைக் கொல்வதென்ருல் படையால் முடியாது என்பதை நாமே யறிந்திருக்கிரேம்" என இவ்வாருக நினைந்திருக்கும் காலையில் கபிலர் அவர்கட்கு நல்ல சூழ்ச்சி யொன்று சொல்லிக்கொடுத்தார். அச்சூழ்ச்சியே அவர்கட்கு ஏற்றதாயிற்று.

அது:—

குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி
ஆர மாதலின் அம்புகை யயலது
சாரல் வேங்கைப் பூஞ்சினைத் தவழும்
பறம்பு பாடின ரதுவே யறம்பூண்டு
பாரியும் பரிசில ரிரப்பின்
வாரேன் என்னுன் அவர்வரை யன்னே

(புறம் 108)

இப்பாடலின் ஈற்றடி யிரண்டுமே அவர்கட்கு வழி காட்டியனவாகும். இதன்படியே யவர்கள் பாரியிடம் பாடிச்சென்று அவனையே தங்கட்கு வேண்டும் என்று இரந்து அவன் மகிழ்ந்து வரப்பெற்றுக் கொலை

செய்தாராவர். * இதனுல் மேல் வினவிற்கு விடை பெறலாம்.

ஈண்டு ஒரு பொருத்த வினு எழும். கபிலர் தமது உயிர் நண்பனுன பாரி யிறக்கும்படியும் ஒருவழி கூறுவாரோ? ஒரு வேளை தம்மையறியாமலே கூறினர் எனின் அவர் "வாய் மொழிக் கபிலன்" எனப்படுவாரோ?

"உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன்" (அகம் 78)

---

* "குறத்தி மாட்டிய" என்ற பாடலுக்கு விளக்கஉரை கண்ட ஒளவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் கூறுவதாவது:—

"வேள்பாரியைப் போர் உடற்றிவேறல் அரிதெனவுணர்ந்த தமிழ் வேந்தர் இரவலர் வடிவிற் போந்து அவனையே யிரந்து நிற்ப, அவன் இரவலர் இன்மை தீர்க்கும் நல்லறத்தைக் கைக்கொண்டு அவர் வழிச் சென்று அவரால் கொலை யுண்டாயுதலின் அக் குறிப்புத் தோன்ற "அறம் பூண்டு வாரேன் என்றுன் அவர் வரையன்னே" என்ருர்.

பிள்ளையவர்கள் இப்பாடல் வேள்பாரி யிறந்த பின் கபிலரால் பாடப்பட்டது என்பர். யாம் இறக்கு முன்பே பாடப்பட்டதென்று கருதுகின்றேம். பிள்ளையவர்கள் கூற்றுப்படிப் பின்னர் பாடப் பட்டதேயெனினும் கபிலரின் "கடந்தடுதானை" யென்ற பாடலே பாரி யிறந்தமைக்குக் காரணமாம் என்பதில் ஐயமில்லை.

என நக்கீரரும்,

> "அரசவை பணிய அறம் புரிந்து வயங்கிய
> மறம்புரி கொள்கை வயங்கு செந் நாவின்
> உவலைக் கூராக் கவலையில் நெஞ்சின்
> நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்,"
>
> (பதிற்று. 85)

எனப் பெருங் குன்றூர் கிழாரும்,

> "செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
> வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்"
>
> (புறம். 53)

எனப் பொருந்தில் இளங்கீரனாரும்,

> "புலனழுக் கற்ற அந்தணாளன்" (புறம் 127)
> "பொய்யா நாவிற் கபிலன்" (புறம் 174)

என மாறோகத்து நப்பசலையாரும் கபிலரைப் புகழ்ந்தவைகள் பொய்யாமோ? அவர்கள் கபிலரைப்போற்றிக் கூறியது தவறோ? எனப் பலவாறாகவும் வினவலாம். நக்கீரர் முதலிய வாய் மொழிப் புலவர்கள் புகன்றன யாவும் உண்மையே யென்னலாம். கபிலர் வாய் மொழிக் கபிலரே; செந்நாவுடையவரே. நாவிற்குச் செம்மையாவது சொன்ன சொற்கள் பொய்யாமையேயாம். அதனை உட்கொண்டே நப்பசலையார் 'பொய்யாநா' என்றார். நக்கீரர் கூறிய "வாய்மொழி என்றதற்கு 'வாய்க்கும் மொழி' யென்றே பொருள் கொள்ளலாம். கபிலர்க்குப் பாரி யிறக்க வேண்டும் என்னும் கருத்தில்லை யாயினும், அவரது சொல் மூவேந்தர்களுக்கும் பயன்பட்டமையின், அவர்கள் அச்சொல்லையே உறுதியாகப்பற்றிப் பாரியைக் கொன்றனர். எனவே அவர் மொழி 'வாய்மொழி' யெனப்

பட்டு வாய்த்தது. அவர் சொன்ன சொல்லும் பொய் யாமையின் நாவும் 'செந்நா'வாயிற்று எனக் கொள்ள லாம். கபிலர் பாரியது ஆற்றலினைக் கூறவந்து பாரி யின் இறுதிக்கு வழிகூறிய வகைக்கு உலகில் வழங் கும் ஒரு கட்டுக்கதை தக்க உவமையாம்.

"சிறுவர் பலர் ஒன்றுகூடி ஓர் ஆமையினை அடித் துத் துன்புறுத்தினர். ஆமை, தன் ஐந்துறுப்புக்களை யும் ஓட்டிற்குள்ளடக்கி, அடிபடினும் இறவாதிருந் தது. அவ்வழியே போந்த எந்த உயிரையும் கொல் லாத ஒரு சந்நியாசி, அக்கூட்டத்துள் ஒருவனிடம், ஐயோ பாவம், இப்படி ஓர் உயிரை அநியாயமாகக் கொல்லுகிறார்களே! இவர்கள் எக்கதி யடைவார் களோ தெரியவில்லையே! ஆமையின் முதுகோடு வலுவாயிருப்பதால் அது இறவாதிருக்கின்றது. இவர் கள் அதனைத் திருப்பிப் போட்டடிப்பார்களானால் உடனே அது இறந்துவிடும். அப்படியவர்கள் செய் யாததே நல்லது. இதைத்தான் நாம் சொல்வா னேன்? என்று சொல்லிச் சென்றுவிட்டார். இதைக் கேட்ட அவன் கூட்டாளிகளிடம் கூற, அவர்கள் ஆமையைத் திருப்பிப்போட்டு அடித்துக் கொன்று விட்டார்கள். இதுவே அக்கதை. சந்நியாசிக்கு ஆமை யிறக்கவேண்டும் என்ற எண்ணம் இல்லை. ஆனால் ஆமை யிறப்பதற்கு வழி சொல்லிவிட்டார். இதனோடு கபிலர் கூற்றையும் ஒப்பிட்டால் வினாவிற்கு விடைவரும்.

இளையோர் எனப்படுவாரின் தகுதியறிந்தே படை வழங்குவன்" என்பதை உணர்த்துவான் வேண்டி,

அறுகுளத் துகுத்தும் அகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்காற் பேகன்
கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே
(புறம் 142)

என்ற பாடலைப் பாடினர். மழையானது வற்றிய குளத்தில் நீர்நிறையப் பெய்தும் அகன்ற வயலிடத்துப் பெய்தும், அவ்விடங்களிற் பெய்யாமல் களர் நிலத்துப் பெய்தும் எவ்விடத்தும் வரையாது பெய்வது போலப் பேகனும் வரையாது வழங்குவன் எனப் பேகனுக்கு மழையை உவமை காட்டியது வியக்கத் தக்கது. இதனால் பரணரது கருத்து கொடை மடம் தக்க தன்று என்றல் அன்று என்பது போதரும்.

இனிக் கபிலர் கருத்தை நோக்குவோம். ஒருகால் கபிலர், திருக்கோவலூரி லிருந்து கொண்டு மலாடு நாட்டை யாண்ட மலையமான் திருமுடிக்காரி யென்ற வள்ளலைக்காணச் சென்றார். காரியும் கபிலர்க்கு வேண்டும் சிறப்புச் செய்தனன். ஆனால் கபிலர்க்குத் தனிச்சிறப்பாக ஒன்றும் செய்யாது மற்றைய புலவர்க்கும் இரவலர்க்கும் செய்வது போன்றே அவர்க்கும் சிறப்புச் செய்தனன். இச்செயல் கபிலருக்குப் பொருந்த வில்லை. உடனே அவர் பின்வரும் பாடலைப் பாடினார்:

ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்

வரிசை யறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்
அதுநற் கறிந்தனை யாயின்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே

(புறம் 121)

நமக்குச் செய்யும் சிறப்பு பிறர்க்குச் செய்யும் சிறப் புப் போலாது மிக்கிருத்தல் வேண்டும் என்று கபிலர் கருதுகின்றவர் என நாம் உணரலாம். 'பொது நோக்கு ஒழிமதி' என்று கூறியதால் கபிலர்க்கு 'கொடை மடம்' தக்கதன்று என்பது கருத்தாகும் எனவும் உணரக் கிடக்கின்றது.

இனி இவ்விரு பெரும் புலவருள் எவரது கொள்கை வலியுறும் என்பதை நாம் காணவேண்டும். ஓரிடத்துக் கபிலர் பாரியின் கொடையினைச் சிறப்பிக் குங்கால் மாரியோடு ஒப்பிட்டுச் சிறப்பித்தனர்.

பாரி பாரி யென்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே.

எனப் பழிப்பது போலப் புகழ்ந்தனர். அறுகுளத் துகுத்தலும், அகல் வயற் பொழிதலும், உவர்நில மூட் டலும் மாரியின் இயல்பென்பதைக் கபிலரும் அறிவர். அவ்வியல்புடைய மாரியை உவமை கூறினமையின் பாரியும் 'கொடைமடம்' பட்டவனே யென நாம் உணரலாம். இன்னார் இத்தகையர் என்றும், இவ்வ ளவு ஈதல் நலம் என்றும் வரையாமை யீதலால் தான் மாரியை உவமை கொள்வாராயினர் புலவர். "மாரி யன்ன வண்கைத் தேர்வேள் ஆய்" என ஆய் அண்டி

ரனைப் பிறர் கூறுதலும் காணலாம். எனவே கபிலர், பாரி கொடைமடம் பட்டவன் என்ற கருத்துப் புலப் படவே பாடினர் எனக் கொள்ளலாம். இதற்குச் சான்றாக அவரது மற்றொரு பாடலையும் காணலாம்.

"நல்லவும் தீயவும் அல்ல குவியிணர்ப்
புல்லிலை யெருக்க மாயினும் உடையவை
கடவுள் பேணேம் என்னா வாங்கு
மடவர் மெல்லியர் சொல்லினும்
கடவன் பாரி கைவண் மையே" (புறம் 106.)

இதனகத்து "மடவர் மெல்லியர் சொல்லினும் பாரி கைவண்மை கடவன்" என்றது காணத் தக்கது. கைவண்மை — கொடை. கைவண்மை யென்பதற்கு வரிசை யறிந்து கொடுக்கும் கைவண்மை யெனக் கொள்ளலாகாதோ எனின், பாரிக்குக் கொடுக்கப்பட்ட உவமை அங்ஙனம் கொள்ள இடந்தரவில்லை யென்க. "நறுமணமின்மையின் நல்லனவும், கடவுளர் சூடு தலின் தீயனவும் அல்லாத எருக்கம் பூக்களை ஒருவன் கடவுளர்க்குச் சூட்டக் கருதினால் சூடேம் என்று அக் கடவுளர் கூறார்" என்பது உவமை. எருக்கம்பூ மக்க ளால் இழிந்ததாகக் கருதப்படுவது. இழிந்த பூவினை ஒருவன் இறைவனுக்குச் சூட்டக் கருது வானேயானால், சூட்டுகின்றவன் பூவின் இழிவினைக் கருதான். அவன் கருத்தெல்லாம் இறைவனுக்குப் பூச்சூட்ட வேண்டும் என்ற அன்பொடு பட்டனவே யாம். ஏற்றுக்கொள்ளும் இறைவனும் பூவின் இழிவு கருதி அவனுக்குப் பயன்-அருள்-கொடாது விடான். அவனின் அன்பினைக் கருதியே பயன் அளிப்பன். கல்லால் எறிந்த சாக்கியனுக்கருளிய வரலாற்றினையும் நாம்

அறிவோ மன்றோ? அங்ஙனம் அருளும் இறைவனைப் போலப் பாரியும், தன்பால் வந்தோர், மடவர் மெல் லியராயினும், அவர்களின் சொற்கள் இழிந்தனவாயி னும் அவையாவும் கருதாது அவர்களின் வறுமை நிலை யொன்றையே கண்டு அளிப்பன் என்பதே இப் பாடலின் கருத்து. பேகனைப்போலப் பாரியும் முல் லைக்குத் தேர் ஈந்தவன். இதனால் இரவலர்களின் வரிசையறியாது ஈதலே மேற்கொண்டிருந்தான் பாரி என்பது பெறப்படும். எனவே பாரியும் கொடை மடம் பட்டவனே என்னலாம். கபிலரும் அக்கருத் தினரே யென்னலாம். கொடை மடம் தக்கதன்று என்றல் கபிலர்க்கும் கருத்தில்லை யென்றும் நாம் எண்ணலாம்.

கொடைமடம் பட்டவனாகப் பாரியைக் கூறிய கபிலர், காரியிடம் "பொது நோக்கு ஒழிமதி" என் றது தக்கதோ எனின் தக்கதன்றென்றே கொள்ள வேண்டும். கபிலர் பாரியின் உயிர் நண்பர். எனவே பாரியிடமே தங்கியிருந்தவர். பாரியின் செல்வமனைத் தும் தமது செல்வமாகவே கருதியவர். பாரியால் சிறப்பிக்கப் படுதல் என்பதின்றித் தாமே பாரி எனப் பிறர் கருதுமாறு வாழ்ந்தவர். எனவே பாரியால் பொருள்கள் ஈயப்பட்டு அவற்றைப் பெற்றவரல்லர். ஆனால் காரியிடம் சென்றபோது அவனால் சிறப்பிக் கப்பட்டார். சிறப்பிக்கப்பட்ட காலத்தில் தான் பிறரைச் சிறப்பித்தது போலவே தம்மைச் சிறப்பித் தது தெரிய வந்தது. அதனால் தாம் மற்றையோரி னும் சிறந்த அறிவினரா யிருந்தும் ஒப்பக் கருதப் பட் டோமே யென வருந்திக் கூறினார். கபிலரின் கூற்றுப்

படி பொது நோக்கு ஒழிந்து வரிசை யறிந்து வழங்கி வரலாயினன். அதனால் அவனிடம் பன்னாள் தங்கிப் பின்னர் பாரியை யடைந்தார் கபிலர். இதனால் காரியிடம் செல்வதற்கு முன்னரே மேற்காட்டிய பாரியைப் பற்றிய பாடல்களைப் பாடியிருக்கலாம் என எண்ணவேண்டி யிருக்கிறது.

எவ்வாறாயினும் கபிலர் கொடைமடம் தக்கதன்று என்றவர் அல்லர் எனக் கொள்ளலாம். காரியிடம் கூறியது தன்னலம் கருதியே என்ற முடிவிற்கு வரலாம்.

ஈண்டொரு வினா இயற்கையில் எழும். அதாவது,

"பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்" (குறள் 528)

என வள்ளுவர் அரசனுக்குப் பொது நோக்கு ஆகாது என்றது தவறோ? என்பதாகும். வள்ளுவர் அரசன் தன் சுற்றத்தைத் தழுவுமிடத்து நடந்துகொள்ள வேண்டிய முறையைக் கூறினார். இரவலர்க் கீத்தலைப் பற்றிக் கூறினாரல்லர். அன்றியும் அவர் அரசரின் நோக்கம் பற்றிக் கூறினாரே யன்றிக் கொடையைப் பற்றிக் கூறினாரல்லர். அவரவர்கள் தகுதிக்கேற்ப மதித்தொழுக வேண்டும் என்பதே கருத்து. கொடையைப்பற்றிக் கூறவந்த இடத்தில் கூறப்பட்டதன்று ஆதலின், அக்குறளை யீண்டுக் காட்டுவது பொருத்தமின்று.

இதுபற்றி ஔவையாரின் கருத்தைக் கூறி இக் கட்டுரையினை முடித்துக் கொள்வோம்.

நாஞ்சில் நாட்டிற்கு ஔவையார் விறலியருடன் சென்றிருந்தார். அவருடன் போந்த விறலியர் தாம் தங்கியிருந்த வீட்டின் பக்கத்தில் முளைத்துக்கிடந்த கீரைகளைப் பறித்துச் சமைக்கலுற்றனர். அதனுடன் சேர்ப்பதற்குரிய துவரையரிசி யின்மையால் ஔவையார், நாஞ்சில் நாட்டிற்குரிய வள்ளுவனிடம் சென்று சிறிது துவரையரிசி வேண்டினர். அதற்கு வள்ளுவன் ஔவையின் வறுமை நிலையினையும், தன்னுடைய செல்வ நிலையினையும் சீர்தூக்கி ஒரு பெரிய களிற்றினை யீந்தனன். * பெற்று மகிழ்ந்த ஔவையார். புலவர்களை நோக்கி, "செந்நாப்புலவீர்! யாம் சிறிது அரிசி கேட்க அவன் பெரிய களிற்றினை யீந்தனனே! இப்படியொரு தெளியாக் கொடையும் உண்டோ? அதனால் அவன் ஒரு மடவன் (அறியாமை யுள்ளவன்) ஆவன்" என்று அவனைப் புகழாமற் புகழ்ந்து, இறுதியில், "பெரியோர் தாம் கொடைத்தொழிலில் ஆராய்ந்து பாதுகாத்துச் செய்யார் போலும்" எனக் கூறினார்.

தடவுநிலைப் பலவின் நாஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற செந்நாப் புலவீர்
வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறை யாக யாம்சில
அரிசி வேண்டின மாகத் தான்பிற
வரிசை யறிதலிற் றன்னுந் தூக்கி

---

* அக்காலத்துக் கொடையாளர்கள், தம்பால் வந்த இரவலர்க்கு அவரது வறுமை தீரக் களிறும் அதனைப் போற்றற்கேற்ற செல்வங்களும் ஈதல் வழக்கம்.

இருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கி யோனே யன்னதோர்
தேற்றா ஈகையும் உளதுகொல்
போற்றா ரம்ம பெரியோர்தங் கடனே

(புறம் 140)

இப்பாட்டகத்து 'வரிசை' என்பதற்குத் 'தான் பரிசிலர்க்குதவும் வரிசை' யென்றும், 'தன்னுந்தூக்கி' என்பதற்கு 'எம்வறுமையைப் பார்த்தலேயன்றித் தனது மேம்பாட்டையும் சீர்தூக்கி' என்றும் உரைகாரர் கூறியது நோக்கத்தக்கது. இதனால் ஔவையாருக்கும் கொடை மடம் தக்கதன்று என்றல் கருத்தின்மை யறியலாம்.

---

3. கபிலர் அந்தணரா?

பாரி, கபிலரின் சொற்படி மூவேந்தரால் இறந்த பின்னர் அவனது இளம் பெண்மக்கள் இருவரையும் பாதுகாக்கும் பொறுப்பைக் கபிலர் மேற்கொண்டார். தக்க வயதுற்ற அம்மக்களை மணமுடித்துக் கொடுக்க உளங் கொண்டார். அவர்களை மணப்பதற்குத் தக்க வனாக 'விச்சி' என்னும் நாட்டிற்குத் தலைவனான விச்சிக்கோவைத் தேர்ந்தனர். அவனிடம் சென்றனர். அவனால் பெரிதும் சிறப்பிக்கப்பட்டனர். அவனிடம் தாம் வந்த காரணத்தினைக் கூறினர். பின்

....................விச்சிக் கோவே

இவரே, பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்

கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்.
யானே, பரிசிலன் மன்னும் அந்தணன், நீயே
வரிசையில் வணக்கும் வாள்மேம் படுநன்
நினைக்குயான் கொடுப்பக் கொண்மதி சினப்போர்
அடங்கா மன்னரை யடக்கும்
மடங்கா விளையுள் நாடுகிழ வோயே

(புறம். 200)

எனப் பாரியின் மக்களையும் தன்னையும் சிறப்பித்து அறிமுகப்படுத்தினர். இதனகத்துக் கபிலர், தம்மைப் பரிசிலன் என்றதால் தம் குறையை முடிக்க வேண்டும் என்றதாகவும், அந்தணன் என்றதால் தாம் கொடுத்தற்குத் தகுதியுடையர் என்றதாகவும் நாம் கொள்ளலாம். இங்ஙனம் கூறிய கபிலர்க்கு விச்சிக்கோ தக்க மாற்றம் இறுக்காதுபோகவே கபிலர் அவனை விட்டு நீங்கி, இருங்கோவேள் என்பானிடம் பாரி மக்களுடன் சென்றனர். விச்சிக்கோ கபிலர் கருத்தை ஏற்காமைக்குக் காரணம் தெரியவில்லை. பாரியின் மக்களின் தற்போதைய நிலையை நினைந்த தாலோ, மூவேந்தர்க்கும் பகைவனை பாரியின் மக்களை மணந்தால் அவர்களால் தனக்குத் துன்பம் நேரிடும் என எண்ணியதாலோ, காதலின்றி வலுவில் வரும் மக்களை மணப்பது தக்கதன்றென்ற கருத்தி னாலோ, அன்றி வேறெக்காரணத்தாலோ விச்சிக்கோ மறுத்தனன். கபிலரும் அவனைப்பற்றி ஒன்றும் கூறாது இருங்கோ வேள் என்ற சிற்றரசனிடம் சென்றனர். அவனாலும் நன்கு மதிக்கப்பட்டு சிறப் பிக்கப்பட்டனர். அவனிடத்தும்

இவர்யார் என்குவை யாயின் இவரே
ஊருடன் இரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரி மகளிர்; யானே
தந்தை தோழன்; இவர்என் மகளிர்;
அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே;
நீயே, வடபால் முனிவன் தடவினுள் தோன்றிச்
செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை
உவரா ஈகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே விறற்போர் அண்ணல்
தாரணி யானைச் சேட்டிருங் கோவே,
ஆண்கட னுடைமையிற் பாண்கட னாற்றிய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்!
யான்தர இவரைக் கொண்மதி வான்கவித்து
இருங்கட லுடுத்தஇவ் வையகத் தருந்திறல்
பொன்படு மால்வரைக் கிழவ வென்வேல்
உடலுநர் உட்குந் தானைக்
கெடலருங் குரைய நாடுகிழ வோயே.

(புறம். 201)

என்பாராயினர்.

யாது காரணத்தாலோ இருங்கோ வேளும் மறுத்தனன். உடனே "புலனழுக்கற்ற அந்தணாளர்"ரெனப் போற்றப்பட்ட கபிலர்க்குச் சீற்றம் பெருகியது. தம்மையார் என எண்ணினர். "புலவனும் அந்தணாளனுமாகிய யாம் தர இவரைக் கொண்மதி" யெனக் கூறியும் இவன் மறுத்தனனே யென எண்ணினர். அதனால் அவனை வெறுத்து நோக்கி,

'புலிகடிமால் என்னும் இருங்கோ வேளே! நினது முன்னோர்க்குரித்தாக இருந்த சிற்றரையம் பேரரையம் என இருபகுப்பாக இருந்த பெரு நகரம் அழிந்தமைக்குரிய காரணம் யாதெனின், நின்போல் அறிவற்ற நின் முன்னோருள் ஒருவன், தன்னைப் பாடி வந்த கழாஅத்தலையார் என்னும் புலவரை மதியாது ஒழுகியதே யாகும். கழாத்தலையார் வசைபாட அந் நகர் அழிந்தது. அது போன்று இன்று எம்மை மதியாதவனாயினாய். இதனால் நினக்கும் கேடுறும் என்பதை யறிக. புலவர்களின் வாக்குப் பொய்யாது என்பதை உணர்ந்திலை போலும். நின்னைப் பெரிதும் மதித்தனை. நினது இழிவு நினக்குத் தோன்றவில்லை. நின்பால் உள்ள செல்வம் நீ வாளால் வென்று கொண்டதன்று. நின் தந்தையால் தேடி வைக்கப் பட்டது. நான் நின்னிடம் வந்து "பாரிமகளிர் இவர்; நின்போல் எவ்வி குடியினர்; கொள்க. என்று கூறிய வார்த்தையைப் பொறுத்துக் கொள்க. நின் வேல் வெல்வதாக," என்றிங்ஙனமாகக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் பழித்தும் இகழ்ந்தும் இருபுற வாழ்த்தாகவும் பாடினார். அப்பாடல் வருமாறு:—

வெட்சிக் கானத்து வேட்டுவ ராட்டக்
கட்சிக் காணாக் கடமா நல்லேறு
கடறுமணி கிளரச் சிதறுபொன் மிளிரக்
கடிய கதழும் நெடுவரைப் படப்பை
வென்றி நிலைஇய விழுப்புக ழொன்றி
யிருபாற் பெயரிய உருகெழு மூதூர்க்
கோடிபல வடுக்கிய பொருள்நுமக் குதவிய
நீடுநிலை யரையத்துக் கேடும் கேளினி

நுந்தை தாயம் நிறைவுற வெய்திய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்
நும்போல் அறிவில் நமருள் ஒருவன்
புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை
யிகழ்ந்ததன் பயனே யியல்தேர் அண்ணல்
எவ்வி தொல்குடிப் படீஇயர் மற்றிவர்
கைவண் பாரி மகளிர் என்றவென்
தேற்றாப் புன்சொல் நோற்றிசிற் பெரும
விடுத்தனன் வெலீஇயர்நின் வேலே யடுக்கத்து
அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட் டொள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப்புறங் கடுக்கும்
பெருங்கல் வைப்பின் நாடுகிழ வோயே.

(புறம். 202)

இப்பாட்டகத்து உரைகாரர், 'வெலீஇயர் நின்வேல்' என்றது குறிப்பு மொழி. 'நுந்தைதாயம் நிறைவுற வெய்திய' என்பதூஉம், 'நும்போல் அறிவின்' என்பதூஉம் இகழ்ச்சி தோன்ற நின்றன; 'வேங்கை வீ தாயதுறுகல் இரும்புலி வரிப்புறங் கடுக்கும்' என்ற கருத்து: ஏதம் செய்யாததூஉம் ஏதம் செய்வது போலக் கண்டார்க்கு அச்சம் வரத்தோன்றும் என்றமையில் இதுவும் இகழ்ச்சி தோன்ற நின்றது என்றெழுதுவர்.

விச்சிக்கோவிடம் சென்று மீண்டதுபோலக் கபிலர், இருங்கோவேள் மக்களை மணக்க மறுத்த பின், வேற்றூர் அரசனை நாடிச் செல்வதே நல்லது. அங்ஙனமின்றி இருங்கோவேளை இகழ்ந்தும் பழித்தும் கூறியது பொருந்துமா? கபிலர் தம்மை அந்தணன்

என்று கூறிக் கொள்ளுகின்றார். அந்தணன் எனத் தம்மைக்கூறிக் கொண்டது ஆரிய வழக்காகிய சாதி பற்றியேயாம். சிறந்த புலவர் இவர். ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தக்குறிஞ்சிப்பாட்டு பாடியவர். அதனால் அவனுக்குத்தமிழ் அறிவுறுத்திப் புலமையும் எய்தச் செய்தவர். அப்பாட்டகத்துத் தமிழ் நாட்டுக் களவுமணம் — காதல்மணம் — நன்றாகச் சிறப்பிக்கப் பட்டிருக்கின்றது. தமிழர் மணமுறையினை நன்கறிந்திருந்தும் தாமே வலிய ஒருவனிடம் மணந்து கொள்ள வேண்டும் என்று கூறுதல் பொருந்துமா? எந்தக்காரணத்தாலோ அவ்விருவரும் மணக்க மறுத்தனர். ஆனால் பாரிமக்கள்பால் காதல் கொண்டவர்கள் அல்லர் அவர்கள் என்பது மட்டும் வெளிப்படை. காதல் கொண்டிருப்பார்களாயின் எவ்விதத்தும் மணந்திருப்பர். காதல் முன் அச்சம் நில்லா தன்றோ? எனவே பெருவேந்தர்களுக்கு அவர்கள் அஞ்ச மாட்டார்கள். இதனாலேயே காதல் கொண்டிலர் என அறியலாம். பாரிமகளிர் சிறந்த அழகினராகலாம். ஆனால் அவ்விருவரும் கண்டு காதல் கொள்ளுதற்குரிய நிலையில் இலர் என எண்ணலாம். விருப்பமில்லாதவனை மணக்காத காரணத்தால் வசையாடுவது நன்றா? வசையாடிய கபிலர் எங்ஙனம் அந்தணராக முடியும்? அந்தணர்க்குப் பொருள் கண்ட வள்ளுவர் :

> "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுக லான்"

என்றார் அவர். தமக்குத் தீங்கு புரியும் உயிர்க்கும் இரக்கம் காட்டுவோர் அந்தணர். அப்படி யிருக்க

தமக்குத் தீங்கையே செய்தறியாத இருங்கோவேளுக்குத் தீங்கு நினைத்தாரே கபிலர். இவர் அந்தணராவரா? முதலில் இருங்கோவேளைக் கண்டதும் அவனைப்பற்றி,

"உவரா ஈகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே"

என வெறுப்பில்லா ஈகையுடையார் வழி வந்தவன் எனச் சிறப்பித்தும்,

"ஆண்கடன் உண்மையின் பாண்கடன் ஆற்றிய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்"

என அவனது ஈகையை வியந்தும்,
"விறற்போர் அண்ணல்" என்றும்,
"உடலுநர் உட்குந் தானைக்
கெடலருங் குரைய நாடுகிழ வோயே"

என்று அவன் வெற்றியைக் குறித்தும் கூறியவர், அவன் மணக்க மறுத்தவுடன்,

"நும்போல் அறிவின் நுமருள் ஒருவன்"

என அவனை அறிவற்றவனாக்கியும்,
"நுந்தை தாயம் நிறைவுற வெய்திய
..............................புலிகடி மாஅல்"

என அவனை வீரத்துடன் போர்புரிந்து பொருள் செயல்வகையினை யறியாதவனாக்கியும்,

"அடுக்கத்து,
அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட் டொள்வீ தாய துறுகல்

இரும்புலி வரிப்புறங் கடுக்கும்
பெருங்கல் வைப்பின் நாடுகிழ வோயே''

என அவனது நாட்டினை, அச்சத்தைச் செய்யாத மரமும் அச்சுறுத்துவதாக இழித்துக்கூறி அவன் காவலுக்கும் வீரத்துக்கும் இழுக்குண்டாக்கியும் கூறியது பொருந்துமா? அன்றியும் "கெடலருங் குரைய நாடு" என முதற்கண் நாட்டிற்குக் கேடின்மையைக் கூறியவர், பின்னர், நீடு நிலையரையத்துக் கேட்டிற்குக் காரணம் "நும்போல் அறிவின் நுமருள் ஒருவன், புகழ்ந்த செய்யுட் கழாத்தலையை யிகழ்ந்ததன்பயனே" என்று கூறுமுகத்தான் நினது நகரமும் எம்மை யிகழ்ந்தமையான் கெடும் என்று குறித்து, அவனது நாட்டிற்குக் கேடுண்மையும் கூறியது பொருந்துமா? வாய்மொழிக்கபிலர் அன்றோ இவர்? இவர் வாய்மொழி இருங்கோவேளின் நாட்டினை "கெடலரும் நாடு" என்றமையால் கேடின்மை தருமோ அன்றி எம்மை யிகழ்ந்தமையால் கேடுறும் எனக் குறிப்பாற் குறித்தமையால் கேடுதருமோ? முன்னொரு பேச்சு பின்னொரு பேச்சாக இருக்கின்றது இவரது பேச்சு. இருங்கோவேளிடம் செந்தண்மை பூணாதது கொடுமையேயாம். தன்னாடு கெடும் என்று கூறியதையும் தன்னை அறிவிலி என்றதையும், வீரமற்றவனாக்கியதையும் எண்ணி எண்ணித் துன்புற்றிருப்பான் அவன். புலவர்சொல் வாய்த்து விடுமோ என்றும், அது வாய்க்கும் என்பதற்குக் கழாத்தலையைச் சான்றாகக் கூறினரே என்றும் எண்ணி எண்ணி ஏங்கியிருப்பான். இவ்வேக்கத்தைப் போக்க அம்மகளிரை மணந்து கொள்ளாமை இவனது மனத்திண்மையைக் காட்டுகிறது. இருங்கோவேளின் மனதைப் புண்

படுத்திய கபிலர் வள்ளுவர் கண்ட அந்தணரா? பாரியைக் கொன்றவர் யார் என்ற வினவின் விடையும், பொதுநோக்கு ஒழிமதி என்று காரியிடம் கூறிய கபிலரின் கூற்றும் அந்தணரல்லர் என்பதற்குச் சான்று பகரும்.

---

4. நக்கண்ணையார்

இவர் ஒரு பெண்புலவர். கண்ணின் அழகுநலம் கருதி நக்கண்ணையார் எனப்பட்டவர். நக்கண்ணன் என்ற ஆண்பாற் பெயர்க்கு ஏற்ற பெண்பாற் பெயர் நக்கண்ணை யென்பது. நற்கண்ணை என்பது நக்கண்ணை யெனத்திரிந்து நின்றது. நக்கீரர், நப்பூதனர், நப்பசலையார், நத்தத்தனர் முதலிய பெயர்களையும் ஒப்பு நோக்கலாம். சுலோசனை என்ற வடசொல்லின் மொழி பெயர்ப்பு நக்கண்ணை என்று நற்றிணையுரையாசிரியர்-பின்னத்தூர், நாராயணசாமி அய்யர் அவர்கள் கூறுவர். ஆரியர்கள் தமிழ் நாட்டிற்கு வருவதற்கு முன்னர் பற்பல வகையில் தம் பெயர்களை வைத்திருந்தனர். உடலுறுப்புக்களின் காரணமாகவும், தொழில் காரணமாகவும், ஊர்க்காரணமாகவும், வாணிகம் காரணமாகவும் பிறகாரணமாகவும் பெயர் வைத்திருந்தனர். இவற்றில் இயற்பெயர்களும், பின்னர் வந்த காரணப் பெயர்களும் உள. உடலுறுப்புக் காரணமான பெயர்கள் யாவும் இயற்பெயர்களாகவே யிருக்கும். 'நக்கண்ணையார்' கண்ணுறுப்பின் அழகு காரணமாக வைக்கப்பட்ட பெயர். இப்பெயர் பிறந்த காலத்தில் குழந்தையின் கண்கண்டு வைக்கப்பட்ட

தாகல் வேண்டும். அரிசில் கிழார், கோவூர் கிழார் இவை கள் ஊர்க் காரணமாக வந்தன. கணக்காயனார் என்பது எழுத்தறிவிக்கும் ஆசிரியத் தொழில் காரணமாக வந்தது. கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்பது வாணிகம் காரணமாக வந்தது. இங்ஙனமே பிறவும்; பெயர்கள் உண்மையைக் காண்க. ஆரியர்கள் வந்த பின்னரே—அவர்கள் தமிழர்களுடன் கலந்து பழகிய பின்னரே—அவர்களின் கூற்று வேதத்தில் உள்ளது என்று நம்பிய பின்னரே தமிழர்கள் ஆரியப் பெயர்களை மேற்கொள்வாராயினர். கடவுளர் பெயர்களையும் மிகுதியாக வைத்துக் கொண்டனர். ஆரியர்கள் தங்கள் சொல்லுக்குச் செல்வாக் குண்மையைக் கண்டதும் தமிழ்ப் பெயர்கள் அனைத்தையும் வடமொழிப் பெயர்களாக மொழி பெயர்த்தனர். பின்னர் அவற்றைத் தாங்கள் வைத்துக் கொள்வாராயினர். நக்கண்ணை என்ற பெயரைச் சுலோசனை—சுலோசனா என மொழி பெயர்த்துக் கொண்டனராவார். இனி இவரது வரலாற்றினைக் காண்பாம்.

இவர் அக்காலத்து வழங்கிய முக்காவல் நாட்டு ஆமூர் என்னும் ஊரில் தோன்றியவர். இவரது தந்தையின் பெயர் பெருங்கோழி நாய்கன் என்பது. கோழி என்பது உறையூரின் ஒரு பெயர். நாய்கன் என்பது வணிகர்க்குரிய மரபுப் பெயர். எனவே உறையூரிலிருந்து ஆமூருக்கு வந்து பல்லாண்டுகளாகத் தங்கியிருந்தவனாகல் வேண்டும். இக்காலத்தும் வேற்றூரில் இருப்பவர்க்குச் சிதம்பரம், மதுரை. பழநி, குற்றாலம், பாவநாசம் முதலிய பெயர்களை வைப்பது போல ஆமூரில் இருந்த வணிகமரபினனாகிய அவனுக்கு அவன் பெற்றோர்கள் வைத்த இயற் பெயராகவும்

இருக்கலாம். அவ்வணிகனுக்கு மகளாகத் தோன்றிய நக்கண்ணையார், சிறந்த புலமையுற்றுத் திகழ்ந்தவர் என்பதை, இவரது பாக்களாக அகநானூறு, புறநானூறு, நற்றிணை ஆகிய நூல்களிற் காணப்படும் சில பாக்களைக் கொண்டு அறியலாம். இளமையிலேயே மணமாகாத கன்னிப் பருவத்திலேயே கன்னித்தமிழ்ப் புலமை கவினுறப் பெற்றிருந்தார் எனத் தெரியவருகிறது. அக்காலத்தில் சோழநாட்டரசன் தித்தன் என்பான் மகன் சோழன் போரவைக் கோப்பெருநற் கிள்ளி என்பவன், தன் தந்தையுடன் எக்காரணத்தாலோ மாறுபட்டு அவனை விட்டு நீங்கித் தனித்திருந்தனன். ஒருகால் ஆமூரில் மல்லன் ஒருவன் மற்போரில் தனக்கிணையில்லையெனத் தருக்கியிருப்பது தெரிந்து அவனை வெல்ல நினைத்து ஆமூர் வந்து தங்கினன். இவன் தங்கிய மனை நக்கண்ணையார் மனைக்கு அயல்மனை. அதனால் நக்கண்ணையார், கிள்ளியை அடிக்கடிக் காணும் வாய்ப்பினராயினர். கிள்ளியின் அழகு, ஆண்மை, முதலியன இவரது மனதைக் கவர்ந்தன. அவன்பால் சிறந்த காதல் கொண்டனர். ஆனால் அவன், இவர்பால் காதல் கொண்டானோ என்பது புலப்படவில்லை. அதற்குரிய சான்றுகளும் இல. அவன்பால் இவர் காதல் கொண்டு வருந்திய பாக்கள் புறநானூற்றிற் காணப்படுகின்றன. அவர் தமது வருத்தத்தைக் கூறும் பாடலின் கருத்து பின்வருமாறு.

“காலிற் கட்டிய வீரக்கழலினையும் கருத்த தாடியினையும் உடைய காளையைப் பெறும் வாய்ப்பில்லாது வருந்திக் கிடப்பதால் உடல் மெலிய, தொடியானது தோளின் நீங்கிக் கீழே விழுகின்றது. விழுவதனைத் தாய் அறியின் காரணம் வினவுவாள். உடலிளைப்பும்

அதற்குரிய காரணமும் அறிவள். இற்செறிப்பு முதலிய துன்பங்களால் கிள்ளியைக் காணவும் பெற வியலாது வருந்தும்படிச் செய்வள். அதனல் தொடி கழலுவதைக்கண்டு தாய் அறிவாளோ எனத் தாய்க்கு அஞ்சுவேன். தாயையும் பொருட் படுத்தாமல் சென்று அக்காளையின் போரடுதோளைப் பொருந்தி முயங்கலாம் எனின் அவையத்தார்க்கு நாணுவேன். சான்ரேர் தாம் சான்ருக நின்று ஒருத்தியை ஒருவ னுக்கு மணமுடித்துக் கொடுக்கும் இயல்பினர் காத லுற்றவரையுமறிந்து சேர்க்கும் இயல்பினர் ஆதலின், அவர்கள் என் காதல் நிலையுணர்ந்து எனக்கு மண முடிக்க வேண்டியவர்கள். அவர்கள் அது செய்யுமள வும் பொருது யானே சென்று அவன் தோளை முயங்கு வேனுயின் அவர்கள் என்னை இகழ்வர். அதனல் அவையத்தார்க்கு நாணுவேன். தாயில்லை யென்ருல், உடலிளைப்பால் தொடி கழலுதற் கஞ்ச வேண்டிய தில்லை; அலலது அவை யில்லை யென்ருல் சென்று முயங்குதற்கு அஞ்ச வேண்டுவதில்லை. யான் இங்ங னம் அஞ்சித் துன்புறுதற்குக் காரணமாகத் தாய், அவையத்தார் என்ற இருபகுதியினும் பொருந்தியிருக் கும் இவ்வூரும் என் போலத் துன்புறுக.'' என்பது, இக்கருத் தமைந்த பாடலாவது.

அடிபுனை தொடுகழல் மையணற் காளைக்கென்
தொடிகழித் திடுதல்யான் யாயஞ் சுவலே
அடுதோள் முயங்கல் அவைநா ணுவலே
என்போற் பெருவிதுப் புறுக வென்றும்
ஒருபாற் படாஅ தாகி
இருபாற் பட்டஇம் மைய லூரே (புறம் 83)

என்பதாகும். இங்ஙனம் எண்ணி எண்ணித் துன்புற்ற நாட்களில் ஒருநாள் ஆவூர் மல்லனுக்கும் போரவைக் கோப் பெருநற் கிள்ளிக்கும் மற்போர் மூண்டது. அப்போரில் கிள்ளி மிக்க திறமையுடன் மல்லனுடன் பொருதனன். அதுகண்டு சாத்தந்தையார் போன்ற புலவர்கள் கிள்ளியின் திறனைப் புகழ்ந்து கிள்ளியே வெல்வன் என்றனர். மல்லன் பக்கத்தைச் சார்ந்தோர் சிலர் "கிள்ளி தோற்பன்; மல்லனே வெல்வன்" எனக் கூறிச் சென்றனர். இவற்றைக் கேட்ட நக்கண்ணையார் விரைந்தோடித் தம்மனைப் பக்கத்தே ஒரு பனைமரத்தின் அடியைச் சார்ந்த வண்ணம் நின்று அப்போரினைக் கண்டனர். முடிவில் கிள்ளியே வென்றது கண்டு கீழ்வரும் பாடலைப் பாடினர்.

என்னைக் கூர்இஃ தன்மை யானும்
என்னைக்கு நாடிஃ தன்மை யானும்
ஆடு ஆடு என்ப ஒருசா ராரே
ஆடன் றென்ப ஒருசா ராரே
நல்ல பல்லோர் இருநன் மொழியே
அம்சிலம் பொலிப்ப ஒடி யெம்மில்
முழாவரைப் போந்தை பொருந்தி நின்று
யான்கண் டனனவன் ஆடா குதலே

(புறம் 85)

கிள்ளி வெல்வன், வெல்லான் எனப் பலபடக் கூறியதற்குக் காரணம், 'அவனுக்கு நாடும் ஊரும் இது அல்ல என்பதேயாகும்' என இவர் கருதிக் கூறினர். உள்நாட்டில் உள்ளூரில் இருப்பவனே வெல்வன் என்பது பெரும்பான்மையான கொள்கை, "உள்ளூர்

ரெளடி வெளியூர்ப் பதடி'' என வழங்குவதையும் காண லாம். கிள்ளியின் வெற்றியை நேரிற் கண்ட இவர் அவனது தோள்வலியையும் அழகினையும் வியந்து விய ந்து மகிழ்ந்தார். அம்மகிழ்ச்சியிடையே அக்கிள்ளியின் ஏழ்மை நிலையை யெண்ணினர். சிறந்த செல்வ மகனு யிருந்தும் தந்தையை நீங்கித் தனித்து வந்தமையால் உண்ண நல்ல உணவின்றிக் கஞ்சியுணவினை உண்டு வருவதை நினைந்தார். தாழ்ந்த கஞ்சியுணவினை யுண் டும் பெருந்தோளனுக இருக்கும் பெருமையை உணர்ந் தார். அடிக்கடி அவனைக் காணுதற்குரிய பக்கத்து மனையில் தாம் இருந்தும் அவனை முயங்குதற்கில்லா மையால் தம்துயரை வெல்லமாட்டாது பொன்னிற மாயின நிலையையும் எண்ணி வருந்தினர்.

அதனுல்,

என்னை, புற்கை யுண்டும் பெருந்தோ ளன்னே
யாமே, புறஞ்சிறை யிருந்தும் பொன்னன் னம்மே
    போரெதிர்ந் தென்னை போர்க்களம் புகினே
    கல்லென் பேரூர் விழவுடை யாங்கண்
    ஏமுற் றுக் கழிந்த மள்ளர்க்கு
    உமணர் வெரூஉம் துறையன் னன்னே

(புறம் 84)

எனப் பாடினர். இதனகத்து முதலிரண்டடி போக எஞ்சியவற்ருல் "தம் தலைவன் போர் ஏற்றுக் கொண்டு போர்க்களத்துப் புக்காணுயின், கல்லென ஒலிக்கும் பேரூரில் போர் விழாவுடைய அவ்விடத் தில் தம் தோள்வலி பேசி இன்புற்று வந்த வீரர்கட்கு உமணரை அச்சுறுத்துகின்ற மிகவும் ஏற்றிழிவுடைய துறையினை ஒப்பான்'' எனத் தம் தலைவனது

வீரத்தை மிகுத்துரைத்தார். இதனால் வீரர்கட்கும் தமக்கும் தகுதியறிந்து அருளாமையையும் அருளுதலையும் செய்யாது ஒரு சேரவே துன்பத்தை விளைக்கின்றான் எனக்கூறி வருந்தினாராவர்.

இவர் பாடியனவாக மேற்காட்டிய முப்பாடல்களும் புறநானூற்றிற் காணப்பட்டன. ஒரு தலைவியின் கூற்றாக இருப்பினும் இவைகள் அகப்பொருட்குரிய தலைவியின் கூற்றாக அமையவில்லை. அகப்பொருள் தலைவிக்கு இயற்கைப் புணர்ச்சிக்கு முன்னர்க் கூற்று நிகழ்தல் இல்லை.

> "முற்படப் புணராத சொல்இன் மையின்
> கற்பெனப் படுவது களவின் வழித்தே"

என்ற இறையனார் அகப்பொருட் சூத்திரங் காண்க. நக்கண்ணையார் இயற்கைப் புணர்ச்சியின்றித் தாம் காதல்கொண்ட நிலையிலேயே இப்பாடல்களைப் பாடியுள்ளமையால் இவைகள் ஒருதலைக் காமமாகிய கைக்கிளையின்பாற் படுவனவாயின. அதனாலேயே இவை புறத்திற் சேர்க்கப்பட்டன.

இவர் கிள்ளியை மணந்தாரா இல்லையா என்பனவெல்லாம் தெளிவாகத் தெரிந்தில. இவரது நற்றிணைப் பாடல்கள் வருமாறு:—

> உள்ளூர் மாஅத்த முள்ளெயிற்று வாவல்
> ஓங்கல் அஞ்சினைத் தூங்குதுயில் பொழுதின்
> வெல்போர்ச் சோழர் அழிசியம் பெருங்காட்டு
> நெல்லியம் புளிச்சுவைக் கனவி யாஅங்கு
> அதுகழிந் தன்றேதோழி யவர்நாட்டுப்
> பனியரும் புடைந்த பெருந்தோட் புன்னை

துறை மேய் இப்பி ஈர்ம்புறத் துறைக்கும்
சிறுகுடிப் பரதவர் மகிழ்ச்சியும்
பெருந்தண் கானலும் நினைந்தவப் பொழுதே

(நற். 87)

"தோழீ! மாமரத்தில் உள்ள முள்ளெயிற்றுவாவல் உயர்ந்த ஒரு கிளையில் தூங்கும்போது, அழிசியின் பெரிய காட்டிலுள்ள நெல்லிப் பழத்தின் புளிப்புச் சுவையைத் தான் பெற்றுண்டதாகக் கனவு கண்டது போல, யானும், தலைவனது நாட்டில் புன்னையின் அரும்பு விரிந்து தாதுக்கள் துறைப் பக்கங்களில் மேயும் சங்குகளின் முதுகினை மறைக்கின்ற சிறிய குடியில் வாழும் பரதவர் மகிழ்ச்சியையும், குளிர்ந்த சோலையையும் நினைந்து மகிழ்ந்த அப் பகற் பொழுதிலேயே அவரை முயங்குவதாகக் கனவு கண்டேன்; ஆனால் அது வாய்க்கப் பெற்றிலேன்." என்பது இப் பாடலின் கருத்து. நெய்தல் திணையில், 'வரை விடை வைத்துப் பிரிய ஆற்றளாகிய தலைவி கனக்கண்டு தோழிக்குரைத்தது' என்ற துறையாக அமைக்கப் பட்டுள்ளது. துறைப் பொருள் எவ்வாறாயினும் நக்கண்ணையார் தாம் கிள்ளியை முயங்குவதாகப் பல முறை கனவு கண்டு இங்ஙனம் அகப்பொருட்சுவை மலியப் பாடியிருக்கலாம் எனவும் கொள்ளலாம்.

இறவுப்புறத் தன்ன பிணர்படு தடவுமுதல்
சுறவுக்கோட் டன்ன முள்ளிலைத் தாழை
பெருங்களிற்று மருப்பின் அன்ன அரும்புமுதிர்ந்து
நன்மா னுழையின் வேறுபடத் தோன்றி
விழவுக் களங்கமழும் உரவுநீர்ச் சேர்ப்ப
இனமணி நெடுந்தேர் பாகன் இயக்கச்

செலீஇய சேறி யாயி னிவளே
வருவை யாகிய இன்னாள்
வாழா ளாதல்நற் கறிந்தனை சென்மே. (நற்றிணை)

இதுவும் நெய்தற்றிணை துறை—புணர்ந்து நீங்கிய தலைவனைத் தோழிவரைவு கடாயது. "சேர்ப்ப! பாகன் தேரைச் செலுத்த நின்னூர்க்குச் செல்வையாதலால் நின்னைப் பிரிந்த இவள் நீ வருவதாகக் குறித்துச்சொல்லும் அச்சிலநாள்தானும் உயிர் வாழாள் என்றதை நன்றாக உணர்ந்து செல்வாயாக." என்பது இதன் கருத்து. இப்பாடலை நக்கண்ணையார், போரவைக்கோப் பெருநற் கிள்ளி ஆமூர் நீங்கிச் சோழநாடு சென்று முடிசூடச் செல்லுங்காலத்தில் பாடியிருக்கலாம்.

அகநானூற்றில் காணப்படும் "இடம்படுபறியா" என்னும் பாடல் நக்கண்ணையார் செய்ததென்றும், திண்பொற் கோழிக் காவிதி மகன் கண்ணனார் செய்ததென்றும், நக்கணன் செய்ததென்றும் பாடங்கள் காணப்படுதலின் இவர் பாடியதாகக் கூறப்படும் அதனை ஈண்டுக் குறிக்காது விடுகின்றேம்.

---

5. பரிசில் வாழ்க்கை

சோழன் நலங்கிள்ளி யென்பானுக்கும் நெடுங்கிள்ளி யென்பானுக்கும் சோழநாட்டின் அரசுரிமை பற்றிப் பெரும் போர் மூண்டது. பற்பல இடங்களிலும் பொருது வெற்றியோ தோல்வியோ எய்தாது இறுதியில் நெடுங்கிள்ளியானவன் நலங்கிள்ளியோடு எதிர்க்க லாற்றாது ஆவூர் சென்று, ஆங்குள்ள

கோட்டையைத் தனக் கரணகக்கொண்டு அடைத் திருந்தான். அஃதுணர்ந்த நலங்கிள்ளி, வஞ்சி சூடிச் சென்று அக்கோட்டையை முற்றுகை யிட்டனன். நெடுங்கிள்ளியானவன் எதிர்க்க இயலாது கோட்டைக் கதவினை வாளா அடைத்திருந்தான். அதனால், கோட்டைக்குள்ளிருந்த மக்கள் துன்புற்றனர். அஃதுணர்ந்த கோவூர் கிழார் என்னும் புலவர், அவனுக்கு அறவுரை கூறி வீரமூட்டிப் போர் புரியத் தூண்டினர். போர் தொடுத்தற்கஞ்சிய நெடுங் கிள்ளியும் கோட்டைக் கதவினைத் திறந்துவிட்டு உறையூர் சென்று அரண் செய்து அடைத்திருந்தான். ஆவூரை நலங்கிள்ளி கைக்கொண்டான்.

ஒருகால் நலங்கிள்ளியிடம் பரிசில் பெற்றுத் திரும்பிய இளந்தத்தர் என்ற புலவர் ஒருவர் பரிசில் பெறுவான் விரும்பி உறையூரிலிருந்த நெடுங்கிள்ளியிடம் சென்றார். சென்ற புலவரை அவன் நலங்கிள்ளியின் ஒற்றன் இவன் என எண்ணி இளந்தத்தரைச் சிறைப்படுத்திக் கொல்லக் கருதினன். இதனை உணர்ந்த கோவூர் கிழார் விரைந்து சென்று புலவரின் பரிசில் வாழ்க்கை நிலையை விளக்கி, இவர் புலவர்; ஒற்றர் அல்லர்; என்றும் கூறி அவரை விடுவித்தனர். அவர் கூறிய பாடல் பின் வருமாறு:—

வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய என்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை

பிறர்க்குத் தீதறிந் தன்றோ வின்றே, திறப்பட
நண்ணார் நாண அண்ணாந் தேகி
ஆங்கினி தொழுகின் அல்லது ஓங்குபுகழ்
மண்ணாள் செல்வம் எய்திய
நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே

(புறம். 47)

இனி இப்பாட்டகத்துக் கூறப்பட்ட பரிசில் வாழ்க்கை நிலையை விரிவாகக் காணலாம். கோவூர் கிழார் தொகுத்துக் கூறியவற்றைப் பிறபுலவர்கள் தனித்தனித் தம்பாக்களில் கூறியுள்ளார்கள். அவற்றை முறையே விரிவாகக் காணலாம்.

புலவர்கள் பரிசில் பெற வேண்டிச் செல்வராயின் கொடுக்கும் இயல்பினரான வள்ளியோரையே நாடிச் செல்வர். அவர்கள் வள்ளியோராக — வள்ளன்மையுடையோராக இருத்தலினால் "பழுமரம் தேரும் பறவை போல" (பெரும்பாண். 20) ச் செல்வர்.

"ஒருதிசை ஒருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசில் மாக்கள்"

என்றார் கபிலரும் "இரக்க இரத்தக்கார்க் காணின்" என்றார் வள்ளுவரும். வள்ளியோரை நாடிச் செல்வர் என்றதால் புலவர்கள் கீழோரை நாடிச் செல்ல மாட்டார்கள் என்பது பெறப்படும்.

புலவர்கள் வள்ளியோர் தொலை தூரத்தினராயினும் அவர்களிடம் சென்று இரப்பரே யன்றிப் புல்லராகிய செல்வர் அருகிருப்பினும் அவரிடம் இரவார்கள். கடற்கரை வழிச்செல்வோனுக்கு நீர் வேட்கை மிக்கதாயின் அருகிலுள்ள கடல் நீரை யருந்தாது

தொலைவிலுள்ள சிறிய கிணற்று நீரையே வினவிச் சென்று அருந்துவனன்றோ? அதுபோல என்க.

திரைபொரு முந்நீர்க் கரைநணிச் செலினும்
அறியுநர்க் காணின் வேட்கை நீக்கும்
சின்னீர் வினவுவர் மாந்தர் அதுபோல்
அரசர் உழையர் ஆகவும் புரைதபு
வள்ளி யோர்ப் படர்குவர் புலவர் (புறம். 154)

என்றார் மோசிகீரனார். அங்ஙனம் வள்ளியோரை நாடிச் செல்லுங்காலத்தில் வழியில்,

"ஆனினங் கலித்த அதர்பல கடந்து
மானினங் கலித்த மலைபின் ஒழிய
மீனினங் கலித்த துறைபல நீந்தி" (புறம். 138)

என மருதன் இளநாகனார் கூறியபடிப் பல இடங்களையும் கடக்க நேரும்: அன்றியும்,

நின்னது தாவென நிலைதளர
மரம் பிறங்கிய நளிச்சிலம்பின்
குரங் கன்னபுன் குறுங் கூளியர்
பரந்தலைக்கும் பகை (புறம். 136)

கடந்து வரவேண்டியிருக்கும்: இங்ஙனம் வந்து வடியாநாவின் வல்லாங்குப் பாடுவர், தத்தம் புலமைக் கேற்பவும் வள்ளியோரின் புகழ்க் கேற்பவும் பற்பல வளங்களைப் பாடுவர். அதுகாலை வள்ளியோர் ஈந்தன வற்றைப் பெற்று மகிழ்வர்.

"பெற்றது ஊதியம் பேறியா தென்னேன்
உற்றன னாதலின்" (புறம். 154)

எனக் கோன்கானங் கிழானை மோசிகீரனார் பரிசில் கேட்ட காலத்தில் கூறியதைக் காண்க.

வள்ளியோர் நிறைய ஈந்தன வற்றைத் தாமே துய்த்தல் செய்யாது.

நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னாது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லார்க்கும் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே

(புறம். 163)

எனக் குமணனிடம் பெரும் பரிசில் பெற்று மீண்ட பெருஞ்சித்திரனார் தம் மனையாளிடம் கூறியது போலப் பலர்க்கும் பகிர்ந்து உண்பர். பரிசில் பெறு தற்குள் இவர்கள் படும் துன்பங்கள் பல. "சுடர் சுட்ட சுரத்தேறி" (புறம். 136) வருதலால் "அடி வருந்த நெடிதேறிய....விறலியர் (139) முதலியவர்கள், "உண்ணாமையின் ஊன்வாடி, தெண்ணீரிற் கண் மல்கிக் கசிவுற்ற பல்கிளையொடு, பசியலைக்க" (136) வருந்துவர். இங்ஙனமெல்லாம் வருந்தி வாழும் வாழ்க்கையே பரிசில் வாழ்க்கை. இதுவே வரிசைக்கு வருந்தும் பரிசில் வாழ்க்கையாம்.

இப்பரிசில் வாழ்க்கை பரிசிலர்க்குத் தீங்கு அதாவது துன்பம் தரினும் பிறர்க்குத் தீங்கு தருதலை

யறியாதது. பிறர்தீங்கினை யகற்றி நல்வழிப் படுத்தினும் படுத்தும். கண்ணகி என்ற தன் மனைவியை விட்டு விலகிக் காமக்கிழத்தியால் இருந்த பேகன் என்னும் வள்ளலைக் கபிலர் பரணர் முதலிய புலவர்கள் அவ்வொழுக்கத்தின் நீக்கி மீண்டும் கண்ணகியுடன் இருக்கச் செய்தனரன்றோ? இளந்தத்தரைக் கோவூர் கிழார் மீட்டாரன்றோ?

வறுமையால் வருந்தியிருக்கும் புலவர்கள் வறுமை காரணமாகத் தன்மானம் என்பதை யிழந்து உயிர் வாழார்கள். தம்மை மதியாதார் வாசலை மிதியார்கள். "வாழ்தல்" வேண்டிப் பொய் கூறுார்கள். (139)

ஒருகால் வறுமையால் வாடிய பெருஞ்சித்திரனார் வெளிமான் என்பானிடம் பரிசில் பெறச் சென்றார். அவன் இறக்கும் நிலையில் இருந்தனன். அவன் புலவரைக் கண்டதும், தம்பி இள வெளிமானிடம் புலவர்க்கு வேண்டுவன ஈக என்றனன். இள வெளிமான் புலவரின் தரமறியாதவனாதலின் சிறிது கொடுத்தான். உடனே புலவர் அவனை வெறுத்து நீங்கிக் குமணனிடம் சென்று பாடி, அவனால் களிறு ஈயப் பெற்று அதனை இள வெளிமானுக் கறிவிக்க எண்ணி அவனிடம் சென்று பின்வருமாறு கூறினார்:—

இரவலர் புரவலை நீயு மல்லை
புரவலர் இரவலர்க் கில்லையும் அல்லர்
இரவலர் உண்மையும் காண்இனி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் தோன்றல் செல்வல் யானே

(புறம். 162)

இப் பாடல் பெருஞ் சித்திரனாரின் இறுமாந்த நிலையினைக் காட்டுகின்றதன்றோ? இவரது செயல் பெற்றது மகிழ்வர் என்பதுடன் மாறுபடும் எனின் மாறுபடாது; தகுதியறிந்து சிறிது கொடுப்பினும் கொள்வர். ஆனால் தகுதியறியாது பெரிது கொடுத்தாலும் கொள்ளார் ஆதலின்,

அரசர்கள் பகை வென்றும் அரசர்க்குச் சந்து செய்தும் வருவதுபோலப் புலவர்களும் தம் பகைவர்களைத் தம்புலமையால் வென்றும் பகை வேந்தரிடைச் சந்து செய்தும் தலைமை யெய்துவர். கோவூர் கிழார் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் மீண்டும் உறையூரில் போர் தொடுத்த காலத்தில் இருவரையும் தக்க முறையில் அறவுரை கூறிப் பகை யொழியக் கொண்டார்.

இவற்றால் பரிசில் வாழ்க்கை நிலையை உணரலாம்.

---

6. காவற் பெண்டு.

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினும் அறியேன் ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.

(புறம். 86)

இது காவற் பெண்டு என்னும் பெண்பாற் புல வரால் பாடப்பட்டது. இவர் சிறந்த மறக்குடியிற் றேன்றி மறக்குடியில் வாழ்க்கைப் பட்டவராவர். இவரது பாடலைக் கொண்டு இவரது புலமையை உணரலாம். 'நல்லிசைப் புலமை மெல்லியலார்கள்' என்னும் நூலின் ஆசிரியரான ரா. இராகவ அய்யங்கார் அவர்கள் 'இவர் ஒரு மறமகளாவர்' என்று கூறிப் பின், காவற்பெண்டு என்னும் பெயர் குறித்து, "காவற் பெண்டு என்பது செவிலித்தாயைக் குறிக்கும் என்பது, 'காவற் பெண்டும் அடித்தோழியும்' என்ற சிலப்பதிகாரத்து உரைப் பாட்டு மடைத் தொடரால் அறியப்படுதலின், இவர், தலைவன் ஒருவனை வளர்த்த செவிலி போலும் என்று கருதலாகும். இவ்வாறன்றி அரசனது மெய்காவல், மனைகாவல், ஊர்காவல், பாடிகாவல் இவற்றில் ஒன்றிற்குரிய காவற்குடிக் கண்ணே பிறந்த பெண்டு அவள் எனினும் அமையும்" என்பர். புறநானூற்றினைத் தொகுத்த ஆசிரியர் இப்புலவரைப் பற்றிக் கூறும் போது "செவிலித்தாயைக் காவற் பெண்டென்பதும் வழக்கு. ஈண்டு அஃது இயற்பெயராய் வந்தது" என்பர். இவ்விருதிறத்தாருள் முன்னவர் இப்புலவர் பெயர்க் காரணத்தை இன்னதென வரையறுத்திலர் பின்னவர் இயற்பெயரே எனக் கூறினர்.

பின்னவர் கூறியபடி இயற்பெயராகவே கொண்டு மறக்குல மகள் எனக் கொள்வதே சாலச் சிறந்ததாகும். இவரது பாடலே இதற்குத்தக்க சான்றாகும். இனி இவரது பாடலைச் சற்று ஊன்றி நோக்குவாம்.

காவற்பெண்டிற்கு ஒருமகன் இருந்தனன். அவன் தன் மறக்குடிக் கேற்பச் சிறந்த வீரனாக விளங்கினன். அவன் வீட்டில் அடைபட்டுக் கிடப்ப தில்லை. போர்க்களத்தையே நோக்கித் திரியும் உணர்ச் சியினன். போர் வெறி கொண்டு செல்லுங் காலத்தில் தன் தாயிடமும் சொல்லான். ஒருநாள் அவன் தாயிட மும் அறிவியாது வெளியிற் சென்றிருந்தான். அப் போது அயல் வீட்டினள் ஒருத்திவந்து வீட்டின் தூண் ஒன்றைப் பற்றிச் சாய்ந்தவண்ணம் உரை யாடிக் கொண்டிருந்தாள். அவள் இடையே உன் மகன் எங்கே? என வினவினாள். அவ்வினாவிற் கேற்ற விடையாகத்தான் மேற் பாடலைக் காவற் பெண்டு பாடினார். அதன் பொருள்:—

"சிறிய வீட்டின் கண் நல்ல தூணைப்பற்றி நின்று, நின்மகன் எவ்விடத்துளனோ என்று கேட்டனை- என்னுடைய மகன் எவ்விடத்துளனாயினும் அறி யேன். புலிகிடந்து போன கல் முழைபோல அவனைப் பெற்ற வயிறு இஃது. அவன் யாண்டுளனாயினும் செருக்களத்தின் கண்ணே தோன்றுவன்; அவனைக் காண வேண்டின் ஆண்டுச் சென்று காண்" என்பது.

'நின்மகன் யாண்டுளன்' என வினவியதற்கு அவள் 'யாண்டுளனாயினும் அறியேன்' என விடை யிறுத்ததால், அவள் மகன், வெளியிற் செல்லுங் காலத்துச் சொல்லிச் செல்லும் இயல்பினன் அல்லன் என்பதும், அதனை அவளும் கேட்டறியும் இயல் பினள் அல்லள் என்பதும் அறியலாம். தனக்கும் அவனுக்கும் உள்ள தொடர்புக்குப் புலிக்கும் அது

தங்கும் முழைக்கும் உள்ள தொடர்பினைக் காட்டியது மிக வியக்கத் தக்கது. "புலி கிடக்குமளவும் முழை அதற்குப் பாதுகாவலாகின்றது. அதுபோல என் வயிற்றகத் திருந்த அளவும் அவனைக் காத்து வந்தேன். புலி வெளிப்பட்ட பின்னர் புலிக்கும் அம் முழையின் கவலையில்லை; முழைக்கும் புலியைப்பற்றிய கவலையில்லை. அதுபோல எனக்கு மகனைப்பற்றியும் மகனுக்கு என்னைப்பற்றியும் கவலையில்லை. ஒருவேளை வெளிப்பட்ட புலி மீண்டும் அம் முழையிடத்துவரின் அம் முழை அதற்குக் காவல் அளிப்பதுபோல என் மகனும் என்னிடத்து வரின் வேண்டியது கொடுத்துப் புரந்தருவேன்." என்ற கருத்துக்கள் பெறும்படி உவமை கூறியது வியக்கத்தக்கதன்றோ?

மேற்பாட்டிற்கு உரை யெழுதிய பழைய உரைகாரர் மூன்றுமடியின் ஈற்றிலுள்ள 'ஒரும்' என்பதை அசைநிலை யென்பர். அதைவிட்டு 'ஆராயும்' எனப் பொருள் கூறின் சிறக்கும். 'ஒரும் புலி' எனச் சேர்த்து 'இரைக்காகப் பெரிய களிறுகளை ஒரும் புலி' யெனப் பொருள் கொண்டு, அதுபோல அவள் மகனும், தன் வீரத்தோளுக்கு இரையாகப் பெரிய போர் வீரர்களையே தேர்ந்திருப்பன் என்பதும் குறித்தார், என அகலமும் கொள்ளல் ஏற்புடைத்தாம்.

அடுத்து, 'யான் அறியேனாயினும் அவன் இருக்கும் இடங்களுள் ஓரிடம்மட்டும் உறுதியாக அறிவேன். அவ்விடம் போர்க்களமே' யென்றார், காவற் பெண்டு. பாம்பறியும் பாம்பின் கால் என்றபடி மறக்குடியிற் றோன்றியவராதலின் தனக்குப் பிறந்த

மகனின் தோன்றும் இடம் போர்க்களமாகத்தான் ஆகும் என்று கருதினார். அதனால் உறுதியாகக் கூறினார்.

சிற்றிலை விழாதபடித் தாங்கியும் தன்னைச் சார்ந்தோரைத் தாங்கியும் நிற்கும் தூண், தன் மகன் தன் மறக்குடியின் புகழை வீரத்தால் தாங்கி நிற்பதை நினைப்பூட்டிய தாதலின் அதனை 'நற்றூண்' என்றார். வந்த அயல் வீட்டினள் தூணைப்பற்றிச் சார்ந்து நின்றமையின் அதனை எடுத்துக் கூறினார் என்மகன் என்று மகனால் தாம் அடையும் பெருமிதத்தை வெளிப்படுத்தினார்.

இங்ஙனமாகச் சிறந்த புலமையோடும் வீரத்தோடும் பாடப்பட்ட இப்பாடலை ஊன்றி நோக்கின் காவற்பெண்டு மறக்குடி மகளாவரேயன்றி ஒரு தலைவனை வளர்த்த செவிலித்தாய் ஆகார் என நாம் அறியலாம்.

7. வறுமைத் துயர்.

பழங்காலத் தமிழ்ப் புலவர்களிற் சிலர் சொல்லொணாத வறுமைத் துயரால் வாடியிருந்திருக்கின்றார்கள் என்பது அவர்களது பாடல்களிலிருந்து உணரக் கிடக்கின்றது. அவர்களுள் இருவரின் வறுமை நிலையினை யீண்டு நாம் காண்பாம்.

(1) துறையூர் ஓடைகிழார்

இவர் துறையூரில் வாழ்ந்தவர். ஓடைகிழார் என்பது இவரது இயற் பெயர். மிக்க வறுமையில்

வாடியவர். இவர் தமது வறுமைத் துயரைக் களைய எண்ணிப் பொதியமலைக்குத் தலைவனாகிய ஆய் அண்டிரனிடம் சென்றார். சென்று தம் வறுமைத் துயரை விரித்தனர்.

"பெரும! யாழின்பத்தரினது வெளிப்புறமானது சொர சொரப்புடனும் அழகின்றியும் காணப்படுதல் போல எனது ஆடையும் அழுக்கேறியதாலும் பல தையல்களைக் கொண்டமையாலும் சொர சொரப்புடனும் அழகின்றியும் இருக்கின்றது. தையலிழை சென்ற இடைப் புரைகளில் பேன் கூட்டம் ஈர்க் கூட்டத்துடன் குடியிருக்கின்றது. இக் கூட்டம் என்னை மிகவும் இரத்தம் உறிஞ்சித் தொல்லைப் படுத்துவதால் எனக்குப் பெரும் பகையாக இருக்கின்றது" எனப் பேன் பகையைக் கூறினார்.

"யாழ்ப் பத்தர்ப் புறங்கடுப்ப
இழை வலந்த பல் துன்னத்து
இடைப் புரைபற்றிப் பிணிவிடா அ
ஈர்க்குழாத்தோ டிறைகூர்ந்த
பே என் பகையென ஒன் றென்கோ."

என்ற அடிகளைக் காண்க. தையற் புரைகளில் ஈர்க் குழாத்துடன் பேன் குழாம் குடியிருக்கின்றது என்றதால் அவ்வாடை தோய்க்கப்பட்டு நாட்களாயின என்பதும், அதனால் உடுத்தியிருக்கும் ஓர் ஆடையன்றி மாற்றுடை இவர்க்கில்லை யென்பதும், அதுவும் கிழிந்து கிழிந்து பலமுறை தைக்கப்பட்டதென்பதும் அதனால் அவ்வாடையையும் இழக்கவேண்டிய காலம் மிக அண்மையதென்பதும் கூறினாராகக் கருதலாம். 'பிணிவிடா அ ஈர்க்குழாம்' என்றதால், ஈர்கள்

ஒன்றோடொன்று பற்றிப் பிணிப்பு விடாதனவாயின என்பதும், அவற்றின் தொல்லை மிகுதியும் உண்டு என்பதும் கூறினர். பெரும் பேன்களையாவது கைக்கு வருவன ஆகலின் அப்புறப்படுத்தலாம். ஈர்களை அப்புறப்படுத்த இயலாதன்றோ? ஓடைகிழார் கூறத் தொடங்கும்போதும் பேன் கூட்டம் அவர்க்குத் தொல்லை கொடுத்திருக்க வேண்டும். அதனாலேயே அவர் அவற்றை முதற்கண் கூறினர். இனி அவர் கூறிய இரண்டாம் பகையினைக் காண்பாம்.

"உண்ணுமையின் ஊன்வாடித்
தெண்ணீரிற் கண்மல்கிக்
கசிவுற்றஎன் பல்கிளை யொடு
பசியலைக்கும் பகையொன் றென்கோ"

பசிப்பகை யிரண்டாம் பகையானது. பசி தன்னையும் தன் சுற்றத்தையும் அலைப்பதாகக் கூறினர். "சுற்றத்தார் உணவுண்ணுமையால் உடல் தளர்ந்தனர். அதனை நினைக்க நினைக்கக் கண்களில் நீர் ததும்பியது. இவர்கள் தோற்றத்தைக் கண்டவர்கள் இவர்களின் நிலைக் கிரங்கும்படிக் காணப்படுகின்றனர். இந்நிலைமையாகப் பசியலைக்கின்றது. அப் பகையைப் பற்றிக் கூறுவேனே?" என்று கூறினர். மூன்றுவதாக ஒரு பகையைக் கூறித் தாம் வேண்டியதைக் கேட்டார்.

"அன்ன தன்மையும் அறிந்தீயார்
நின்னதுதா வென நிலை தளர
மரம் பிறங்கிய நளிச்சிலம்பின்
குரங்கன்னபுன் குறுங் கூளியர்
பரந்தலைக்கும் பகையொன்றென்கோ"

ஆறலை கள்வர் மூன்றும் பகையாவர். "பேன் பகையுடனும் பசிப் பகையுடனும் வரும் என் நிலையறியாதவர்களாகிய ஆறலை கள்வர்கள் 'நின்னிடத்துள்ளனவற்றைக் கொடு' என்று கூறிப் பரந்துவந் தலைப்பர். அவர்கள் கைப் பொருளைக் குரங்குபோலப் பறித்துக் கொள்ளும் இயல்பினர். குரங்கு பொருள் இல்லையெனின் வாளா செல்லினும் செல்லும். அவர்களோ கைப்பொருள் இல்லையெனினும் துன்புறுத்துவர். மரங்களடர்ந்த மலையிடங்களிலிருந்து வந்து துன்புறுத்துவர். என் செய்வேன்," என்று கூறி இறுதியில், "இப் பகைகளை அறிந்து நீக்கத்தக்கான் ஆய் ஒருவனே எனக் கூறக் கேட்டு நின்னை யடைந்தேன். நின் தகுதிக் கேற்ப பரிசில் நல்கினை விடின் நின்னை வாழ்த்தி உண்பேன்" என்று கூறி முடித்தார். இதனால் இவரது வறுமை எத்தகையதென உணரலாம்.

(2) பெருஞ்சித்திரனார்.

ஒருகால் பெருஞ்சித்திரனார் குமணனிடம் சென்று வறுமையால் தமது தாயும் மனைவி மக்களும் படும் துயரினை எடுத்துக் கூறிப் பரிசில் வேண்டினர். அவர் உரைத்ததாவது:—

"குமண! என் தாய் மிகவும் வயது முதிர்ந்தவள். வீட்டின் முற்றத்திடத்தும் செல்லவியலாத தொண்டு கிழவி. நூல்விரித்தாற்போன்ற நரைத்த கூந்தலினள். காலில் உரமில்லாதவள். கண்களும் காட்சியை யிழந்தன. அதனால் கோலொன்று கொண்டு அதனையே காலாகப் பயன்படுத்தி அடிமேல் அடியிட்டு ஒதுங்கிச் செல்கின்றாள். கண் பார்வை யிழந்

தமையால் முன்றில் வரையும் செல்லவும் கூடவில்லை. அடிக்கடி விழுவதும், சுவரில் மோதிக்கொள்வது மாகத் துன்புறுகிறாள். அக் காலங்களில், "ஐயோ, இன்னும் என்னுயிர் நீங்கா திருக்கின்றதே! இவ் வுலகில் பல்லாண்டுகளாக இருக்கின்றேனே! இன் னும் இருந்து என்ன பயன்?" என்று தனக் கிருக்கும் நாளை வெறுத்துக் கூறிக்கொண்டு கிடக்கின்றாள். எனது வறுமையால் உடனிருந்து போற்றற்கும் இய லாது நீங்கி வருகின்றேன்" என்று தாயின் துயர் கூறினார்.

"வாழும் நாளோடு யாண்டுபல வுண்மையின்
தீர்தல் செல்லாதென் உயிரெனப் புலந்து
கோல்கோ லாகக் குறும்பல ஒதுங்கி
நூல்விரித் தன்ன கதுப்பினள் கண்துயின்று
முன்றிற் போகா முதிர்வினள் யாயும்"

அடுத்தபடியாகத் தம் மனைவியின் துயர் கூறு கின்றார்.

"என் மனைவி வறுமைத் துயரால் பசந்தமேனிய ளாயினாள். அடிக்கடி வறுமையை நினைந்து நினைந்து ஏங்குகின்றாள். தான் உண்ணாமையின் குழந்தைகள் அருந்துதற்கும் பால் இன்றி வற்றிய மார்பகத்தை உடையளானாள். சிறந்த உணவினை மறந்து பல நாளாயிற்று. பல நாளாகத் தோட்டத்துக் குப்பைக் கீரைகளை உண்டு வந்தேம். கீரைகளைப் பறிக்கப் பறிக்க அவைகளும் கிடைப்பதில்லை. முன்னாள் பறித்த கணுவிடத்தில் தளிர்த்த சிறு தளிர்களை மீண் டும் பறித்து நீருலை ஏற்றிக் காய்ச்சி அவித்து உண்ணு தற்கு உப்பும் இல்லை, மோரும் இல்லை. அதனால் அப்

பச்சிலைக் கீரையினையே எங்கட்கும் இட்டுத் தானும் உண்ணுகிறாள். அவள் உடுத்தியிருக்கும் ஆடை கிழிந்ததும் அழுக்கேறியதுமாக இருக்கின்றது. வறுமையில் உழலும்படிச் செய்ததாக அறக்கடவுளைப் பழித்துக்கொண்டேயிருக்கின்றாள். இங்ஙனம் என்னைச் சார்ந்தமையால் ஒன்றையும் துய்த்தறியாதவளாயிருந்தும் அவள் என்னையே—எனது நலனையே யென்றும் விரும்பியிருக்கின்றாள். இது அவள் துயர் நிலை'' என்றார்.

"பசந்த மேனியொடு படரட வருந்தி
மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதின வாடிய முலையள் பெரிதழிந்து
குப்பைக் கீரை கொய்கண் ணகைத்த
முற்றா விளந்தளிர் கொய்துகொண் டுப்பின்று
நீருலை யாக வேற்றி மோர் இன்று
அவிழ்ப்பதம் மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த உடுக்கையள் அறம்பழியாத்
துவ்வா ளாகிய என் வெய்யோள்''

என்றது காண்க.

இவ் விருவரது நிலையையும் கூறி, "இவர்கள் மனம் மகிழும்படியும், பசிதினத்திரங்கிய என் ஒக்கலும் உவப்பவும் நீ, குன்றியளவு பொருளேனும் மகிழ்ந்து கொடுப்பின் ஏற்றுக் கொள்ளுவேன். மனமகிழ்வின்றி யானை யளவு கொடுத்தாலும் வேண்டேன். அம்முறையில் நீயருளல் வேண்டும்?'' எனப் பரிசில் வேண்டினார். குமணன், இவரது வறுமைக் கிரங்கியவனாய் இவரைப் பெரிதும் போற்றித் தன்னரண்மனையில் நிறுத்தினன். உடனே பசிரிலை

ஈந்து விடுத்திலன். காரணம் புலவரை நன்ருக விருந்தூட்டி உடலுரம் பெறச்செய்து போக விடுப்பது நன்றெனஎண்ணியதாகலாம். அங்ஙனம் சில நாளிருந்து சிறிது உடலுரம் பெற்ற பெருஞ் சித்திரஞர் ஒவ்வொரு நாளும் தமது குடும்ப நிலையை நினைந்து வருந்தி; ஒருநாள் குமணனை நோக்கி, தம்மையுடனே பரிசில் அளித்துப் போக விடும்படி வேண்டினர். அவனுக்குத் தம் குடும்பத்தினர் எவ்வாறு துன்புறுவர் என்பதைக் கூறிஞர்.

"குமண! 'வறுமை நீங்க நிறையப் பரிசில் ஈவன் குமணன்' எனப் பிறர் கூறியது கேட்டு நின்னையடைந்தேன். அடைந்த எனக்குத் துயர் இல்லையெனினும் என் குடும்பம் துயர் உறும். எனது வீட்டிலோ ஒன்றும் இல்லை. அதனுல் சிறு குழந்தை வீட்டை மறந்து திரிகின்ருன். ஏதேனும் தின்னும் நினைப் பெடுக்கவே வீட்டிற்கு வந்து தின்பண்டங்கள் இல்லாமை கண்டு தாயிடம் பாலுண்ணச் சென்று பாலூருமையின் அவளை நீங்கிக் கூழும் சோறும் வேண்டும் என்று கேட்டுக் கொண்டே உள்ளே சென்று ஒவ்வொரு பாண்டங்களாகத்திறந்து பார்த்து ஒன்றிலும் ஒன்றுமில்லாமை கண்டு ஆற்ருது அழுவான். அழவே தாயானவள் அழுகையை நிறுத்துவதற்காக 'புலி வருகிறது' என்று கூறி அச்சுறுத்துவள். அதற்கவன் அஞ்சாது அழுவாஞயின் இனிமையாகக் கூறு முகத்தான் 'அதோ நிலா! நிலா நிலா வா வா என்று நிலாவை வரக் கூவு' என்றுரைப்பாள். அதற்கும் நிறுத்தவில்லை யென்ருல் 'அப்பா முகம் எப்படியிருக்கும் காட்டு' என்று காட்டச்செய்து பார்ப்பள். குழந்தை

முகத்தைச் சுளித்துக் காட்டினும் உடனே அழத் தொடங்குகையில் மிகவருந்திச் சோர்வள்.'' என்று கூறி! அவளது துயர் தீர செல்வம் மிக அளித்து வல்லே விடுதல் வேண்டும் நினது புகழை என்றும் ஏத்துவேம்' 'என வேண்டினர்.

இல்லுணாத் துறத்தலின் இல்மறந் துறையும்
பில்லுளைக் குடுமிப் புதல்வன் பன் மாண்
பாலில் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன்
கூழும் சோறும் கடைஇ ஊழின்
உள்ளில் வறுங்கலம் திறந்தழக் கண்டு
மறப்புலி யுரைத்தும் மதியங் காட்டியும்
நொந்தன ளாகி நுந்தையை யுள்ளிப்
பொடித்தநின் செவ்வி காட்டெனப் பலவும்
வினவ லாஞ ளாகி நனவின்
அல்லல் உழப்போள் மல்லல் சிறப்பச்
செல்லாச் செல்வம் மிகுத்தனை வல்லே
விடுதல் வேண்டுவல் அத்தை படுதிரை
நீர்சூழ் நிலவரை யுயர நின்
சீர்கெழு விழுப் புகழ் ஏத்துகம் பலவே.

என்றது காண்க. இன்னும் இவர் பிறவாறும் வறுமை நிலையை விரித்துக் கூறியுள்ளார். பிற புலவர்களும் கூறிய பாக்களும் புறத்திற் பல உள. அவைகளை விரி வஞ்சி விடுத்தாம்.

8. பிரிந்தோர்ப் புணர்ப்போர்.

சான்றோர்க்குரிய பண்புகள் பல. அவற்றுள் ஒன்று பிரிந்தோரைப் புணர்த்தல். அதாவது காதல் அன்புடன் இல்லறத்திருந்து நல்லறம் புரியும் கணவனும் மனைவியும் ஆறுர் பிரிந்திருப்பின், அவர்களை அறவுரை கூறித் தேற்றி ஒன்றுபடச் செய்து இல்லறத்து இருத்துதல். 'அன்றியும் தலைவன் ஒருவனும் தலைவியொருத்தியும் தம்முள் காதல் கொண்டும், பெற்றோர்கள் மணந்து கொடுக்க இசையாத காரணத்தால், தலைவியை வீட்டில் காவலில் வைத்தல் முதலிய வினைகளால் தலைவன் தலைவியை மணக்கவும் காணவும் வாய்ப்பின்றிப் பிரிந்திருந்தால், அவனுக்கு அவளை மணந்து கொடுக்கும்படி அவளின் பெற்றோர்களுக்கு அறவுரை கூறி அவ்விருவரையும் சேர்த்துவைப்பதும் அவர்கள் பண்பாகும். இதற்குக் குறுந்தொகைப் பாடல் ஒன்று காண்பாம்.

தலைவி தான் காதலித்த தலைவனையே மணக்க எண்ணியுள்ளாள். தலைவனும் தலைவி வீட்டிற்குத் தன்னூர்ப் பெருமக்கள் சிலரை மணம் பேச விடுத்துள்ளான். தலைவியின் பெற்றோர்கள் அவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தனர். அது காலைத் தலைவி தன் பெற்றோர்கள் மணத்திற்கு இயைவரோ அன்றி மறுப்பரோ என்று கவலைகொண்டாள். அதனையுணர்ந்த தோழி மணப்பேச்சு நிகழுமிடம் சென்று கருத்துடன் கேட்கலானாள். "எம் தலைவனுக்கு நும்மகளை மணந்து கொடுப்பது நன்று நன்று" என்று கூறினர். தலைவியின் பெற்றோர்களும் "நீவிர் எம் வீடு தேடிவந்த இன்றைய நாளே பெரிதும் பயன் உற்றது" என்று தமது

TAMIL SANGAM, MADURA

ஒப்புதலைத் தெரிவித்தனர். இவற்றைக்கேட்ட தோழி நேரே தலைவியிடம் வந்து நிகழ்ந்ததைக் கூறினள். இம்மணத்திற்கு இயையார் என்று நாம் கருதிய நம் பெற்றோர்கள் இயைந்து விட்டார்களே. ஆதலினால் நம்மூரில் பிரிந்தவர்களை ஒன்று படுத்திவைக்கும் சான்றோர்களும் இருக்கின்றார்கள் போலும். அவர்களே நம் பெற்றோர்களிடம் இயையும்படி வற்புறுத்தி யிருக்க வேண்டும் 'என்று கூறினள்.

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்க ளொடு
இன்று பெரிதென்னும் ஆங்கண தவையே.

(குறுந். 146)

தோழீ! வீட்டின் அவ்விடத்துக் கூடிய நமர், தலைவனால் அனுப்பப்பட்ட கையிற்றண்டுடையவரும், வெள்ளிய நரைத் தலையில் துணியைக் கட்டியவரும் ஆன பெருமக்கள் மணம் செய்து கொடுப்பது நன்று நன்று என்று சொல்ல அவர்களுடன் இன்றைய நாளே பெரிதும் சிறந்தது என்று கூறாநின்றார். இதனால் நம்மூரில் பிரிந்த இருவரைப் புணர்க்கும் சான்றோர்களும் இருந்தனரோ என்பது இதன் கருத்து. இதனால், கூடிய இருவர் பிறரால் பிரிந்து துன்புறுவராயின் அவ்விடையூறு நீக்கி அவர்களைச் சேர்த்து வைப்பர் என்பது தெரியலாம். இனிக் கூடிய இருவர் அதாவது இல்லறம் நிகழ்த்தும் இருவர் தம்முள் ஒரு காரணம் பற்றிப் பிரிந்தாராயின் அவர்களைச் சேர்த்துவைக்கும் பண்பினர் என்பதற்கு ஒரு வரலாறு காண்பாம்.

சிறந்த காதலன்புடைய மனைவியை ஒருவன் பிரிவதென்பது, பரத்தமை காரணமாக நிகழ்வதன்று வேறு காரணமாக நிகழுமெனின் சிறந்த காதலர்கள் நிலையில் அவர்கள் கருதப்பட மாட்டார்கள். ஆனால் காமம் பற்றி வரும் பரத்தமை காரணமாகப் பிரிதல் ஊழால் வருவது என்பது பண்டைய தமிழ் மக்களின் கோட்பாடு. வையாவிக் கோப்பெரும் பேகன் என்பான் தனது அழகிய மனைவியைத் துறந்து பரத்தமை கொண்டு நடந்து வந்தான். இதனை யுணர்ந்தனர் கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் ஆகிய சான்றோர்கள். இவர்கள் தமது சான்றாண்மைக் கேற்ப அப்பேகனிடம் போந்து அவனுக்கு அறிவுரை கூறினர். அவருள் கபிலர் கூறியதாவது:—

"மலைவான் கொள்கென உயர்பலி தூஉய்
மாரி யான்று மழைமேக் குயர்கெனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்
பெயல்கண் மாறிய உவகையர் சாரற்
புனத்தினை அயிலும் நாட சினப்போர்க்
கைவள் ளீகைக் கடுமான் பேக
யார்கொல் அளியள் தானே நெருநல்
சுரனுழந்து வருந்திய ஒக்கல் பசித்தெனக்
குணில்பாய் முரசின் இரங்கும் அருவி
நளியிரும் சிலம்பிற் சீறூ ராங்கண்
வாயிற் றோன்றி வாழ்த்தி நின்று
நின்னும் நின்மலையும் பாட இன்னாது
இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
முலையகம் நனைப்ப விம்மிக்
குழல்இனை வதுபோல் அழுதனள் பெரிதே" என்பது.
(புறம். 143)

பேகன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன். பழநியென இக்காலத்து வழங்கும் மலைப் பகுதியை யாண்டுவந்த குறுநில மன்னன். வையாவி என்பது அக்காலத்தில் பழநிக்குரிய பெயராயிருந்தது. ஆவியர் என்ற குடியினரைச் சார்ந்தவன். ஒருகால் கார்கா லத்து மேகத்தைக் கண்ட மயில் தோகை விரித்தாடி யது கண்டு அது குளிரால் நடுங்கும் என எண்ணித் தன் விலையுயர்ந்த போர்வையைப் போர்த்தியவன் என்பதும் முன்னரே யுரைக்கப்பட்டது. அத்தகைய சிறந்த வள்ளலின் மனைவி கண்ணகி யென்பாள். கண் ணகி யென்ற பெயர் பெற்றவர்கள் துன்புறுதற் கென்றே தோன்றினார்கள் போலும்! கோவலன் மனைவி கண்ணகியானவள் கோவலன் மாதவிபால் காமங்கொண்டு அவளைப் பிரிய அதனால் துன்புற்றது போன்றே, இப்பேகனின் மனைவியாம் கண்ணகியும் துன்புற்றாள். முல்லை வேலியுடைய நல்லூர் என்ற ஊரகத்திருந்த ஒரு பரத்தையின் வயப்பட்டு அவளுட னேயே பேகன் தங்கிவிட்டான். கண்ணகியானவள் தன் கணவன் தன்னிடம் வராதது கண்டு துயருற்று நாள் ஒப்பனை முதலிய இன்றிப் பொலிவு குன்றலா னாள். இந்நிலையில் தான் கபிலர் முதலிய சான்றோர் கள் இந்நிகழ்ச்சியைக் கேள்வியுற்றுப் பேகனிடம் சென்று அறவுரை கூறினர். கபிலர் எவ்வெவ்வகை யில் அவனுக்கு உணர்த்தவேண்டுமோ அவ்வகையி லெல்லாம் உணர்த்தி யிருக்கிறார் மேற்பாடலில். அப் பாடலின் கருத்தாவது :—“பேக! மேகம் பொழிய வேண்டிப் பலி தூவியும், மிகப் பெய்தலால் அது நிற்க வேண்டித் தெய்வம் பராவி நிற்கப் பெற்றும் மகிழ்ந்த குறவர்கள் தினை யுணவினை யுண்ணும் சிறப்பு வாய்ந்த

மலைநாட்டினை யுடையவனே! எனது சுற்றத்தார்-பல சுரங்களையும் கடந்து வந்தமையால் வருந்திய சுற்றத்தார், பசித்தாராக, அதனை நீக்கவேண்டி நினது நாட்டகத்துச் சீறூரின் வாயிலை யடைந்து நின்னையும் நினது மலையையும் பாடிக் கொண்டிருக்கும்போது, இதனைக் கேட்ட ஒருத்தி, மிகவும் கண்ணீர் வார்ந்து அழுதனள். அவள் யாரோ? யாராயினும் இரங்கத் தக்கவளாகவே யுள்ளாள்'' என்பது. இதில் தம்மை ஒரு பாணனாக வைத்துக் கூறியுள்ளார். இப்பாட்டகத்துக் கபிலர் தமது புலமைத் திறனைக் காட்டி யுள்ளமையைக் காண்பாம்.

முதற்கண் மலைவாழ்நர் மகிழ்ச்சியைக் கூறினார். அவர்கள் மழை பெய்யவும், பெய்த மழை நீங்கவும் கடவுளுக்குப் பலி தூவியும் பரவியும் பயனடைந்து மகிழ்ந்தனர் என்றார். எனவே, நின்னாட்டில் வாழ்வார் மகிழ்ந்திருக்கவும் அவள் மட்டும் துன்புறல் தக்கதன்று என்று கூறினாராவர். அன்றியும், குறவர்கள் தெய்வம் பரவிப் பயன் பெற்றதுபோல அவளும் தெய்வம் பரவிப் பயன் பெறற்குரிய ளாயினும், "கொண்டானிற் சிறந்த தெய்வம் இல்லை'' யென்றிருப்பவ ளாதலின் அங்ஙனம் செய்திலள்! எனவே, சிறந்த கற்பு நெறியிலேயே நிற்கின்றாள் என்பது கூறினாராவர். யார் கொல்! எனத் தமக்குத் தெரியாதது போல் கூறினாராயினும், "நின்னும் நின் மலையும் பாட'' அழுதனள் என்றாராதலின் "நின்னால் அருள் செய்யப்படத்தக்கவள் என்பதையும் உணர்ந்தேன்'' என்றார் ஆவர். அவள் அழுகையும் 'குழல் இனைவதுபோல' இருந்தது என்றதனால் அவள் இனிய மொழியினள் என்றார்

'விம்மி........ அழுதனள் பெரிது' என்றதால் அவள் துயர் மிகுதியை உணர்த்தினர். 'கைவள்ளீகைக்கடு மான்பேக' என விளித்தமையால், என் குறிப்பறிந்து அவளை அளித்தலே எனக்கீயும் பரிசில் என்று குறிப் பித்தார். இங்ஙனமாகத் தமது திறமையால் தெளித் தார் கபிலர். இனிப் பரணர் தெளித்த வகையினைக் காண்பாம்.

கபிலர், குறிப்பாகவே, நின் மனைவியை யடைந்து அவளை யின்புறுத்துக எனக் கூறியது போன்றன்றி வெளிப்படையாகவே கூறியுள்ளார். எடுத்த எடுப்பி லேயே 'அருளாயாகலோ கொடிதே' என்றார். இங் ஙனம் இவர் கூறியதற்கு அவன்பால் இவர் கொண்ட உரிமையேயாகும். முன் ஒருகால் இவனைப் பாடி நிறையப் பரிசில் பெற்றுச் சென்றவர் இவர். (புறம் 141) இவனது கொடை மடத்தைப் புகழ்ந்தவர் இவர். (புறம். 142) அதனால் அவ்வுரிமைபற்றிக் கூறினர். கபிலரைப்போலவே தாமும் தம்மைப் பாணனாகக் கொண்டு ஒரு பாடல் இயற்றியுள்ளார். "பேக! மாலையில் யாம் நினது காரையேற்ற கானத்தை இரங் கற் பண்ணாகிய செவ்வழிப் பண்ணிற் பாடினேமாக. ஒருத்தி—சிறந்த அழகினள்—இளையள், மிகவும் துய ருற்றழுதனள். அவளை யான் எம்மால் பாடப்படும் பேகனுக் குறவினளோ என வினவினன். அவள், தன் கை விரல்களாற் கண்ணீர் துடைத்து ஆம் என வந்தவள், அல்ல என்றுரைத்துப் பின் வருமாறு கூறி னாள். "எம்மைப் போன்ற ஒருத்தியின் அழகை விரும்பி நல்லூர்க்கண் எம்பேகன் அடிக்கடி வரும் என்று அயலார் கூறுவர்." இவ்வளவு கூறி மேலும் கூறுமளவும் ஆங்கு நில்லாது நின்பால் வந்தேன். ஆத

லின் உடனே அவள்பால் சென்று அவளை இன்புறச் செய்யாயாயின் நின்பால் பழியும் பாவமும் ஒருங்கு அடையும்'' என்பது அப்பாடலின் கருத்து. அப் பாடல்:—

அருளா யாகலோ கொடிதே யிருள்வரச்
சீறியாழ் செவ்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடினே மாக
நீல்நறு நெய்தலிற் பொலிந்த வுண்கண்
கலுழ்ந்துவா ரரிப்பனி பூணக நனைப்ப
இனைத லானு ளாக இளையோய்
கிளையை மன்னெங் கேள்வெய் யோற்கென
யாம்தற் றொழுதனம் வினவக் காந்தள்
முகைபுரை விரலிற் கண்ணீர் துடையா
யாமவன் கிளைஞரே மல்லேம் கேள்இனி
எம்போல் ஒருத்தி நலன்நயந் தென்றும்
வருஉம் என்ப வயங்குபுகழ்ப் பேகன்
ஒல்லென ஒலிக்கும் தேரொடு
முல்லை வேலி நல்லூ ரானே'' (புறம். 144)

உலகில் ஒரு கணவன் தன் மனைவியை நீத்துப் பரத்தைபால் செல்வதற்குச் சிறந்த காரணங்கள் இரண்டுள. ஒன்று, தன் மனைவியிடம் அழகின்மை; இரண்டு அவளிடம் இனிது பேசி மகிழ்விக்கும் பண்பின்மை.

"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புல
ஒண்டொடி கண்ணே யுள." [னும்

என்றார் வள்ளுவர். கண்ணிற்கு நிறையின்பமும் காதிற்குரிய இன்பமும் ஒரு பெண்ணிடம் உள என்றால், அவள், சிறந்த அழகினள் என்பதும் இன்சொல்

லினள் என்பதும் உணரலாம். அவள் உண்ணுதற் குரியள் என்றால், தூய்மை யுடையள் என்னலாம். உச்சிமோந் துயிர்த்தற் குரியள் என்றால், தன் கற்பொழுக்கத்தால் இயற்கை மணம் வாய்க்கப் பெற்றவள் என்னலாம். உற்றறிதல் யாவர்க்கும் பொதுவாதலின் வள்ளுவர் அதனைப் பிற்கூறினார். வள்ளுவர் கூறிய ஐம்புல உணர்வுகளையும் உலகில் மக்கள் கருதாமல் முதல் இரண்டு புல உணர்வுகளையே பெரிதும் கருதிப் பரத்தமை மேற்கொள்கின்றனர். பேகன் தன் மனைவியை நீத்துப் பரத்தையிடம் சென்றதற்குத் தன் மனைவியிடம் ஏதேனும் குறைபாடு கண்டானா? கண்டானாயின் அக்குறைபாடு யாது? இல்லையெனின் ஏன் பிரிதல் வேண்டும்? என்பதைச் சற்று ஆராய்தல் வேண்டும். இதற்குத் துணை செய்வது பரணரின் பாடல். கபிலரின் பாடலும் துணை செய்யும்.

பேகனின் மனைவி கண்ணகி சிறந்த அழகினள். "நீலநறு நெய்தற் பொலிந்த உண்கண்", "காந்தள் முகை புரை விரல்" எனப் பரணர் அவளின் உறுப்பின் நயங்களைக் குறித்தமையால் அவள் சிறந்த அழகினள் என்னலாம். மேலும் 'இளையோய்' என இளமையையும், குறித்தார். "கலிமயிற் கலாவம் கால் குவித்தன்ன, ஒலிமென் கூந்தலை" யுடையாள் என்றார் அரிசில்கிழார். "அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை" என்றார் பெருங்குன்றூர் கிழார். எனவே, அழகின்மை காரணமாகப் பேகன் பிரிந்திருக்க முடியாது. இன்சொல் இன்மை காரணமாகவும் பிரிந்திருக்க முடியாது. பரணரே அவள் இன்சொல்லினள் என்று கூறுகிறார். தன்னைவிட்டு நீங்கிய தலைவனைப்பற்றிக் கண்ணகி கூறும்போது "வயங்கு புகழ்ப்பேகன்"

என்று அவன் பால் பெருமதிப்பினளாகவே கூறி யிருப்பதாகக் குறித்தார். எனவே அவள் வன்சொல் லினள் அல்லள் என்னலாம். அன்றியும் கபிலர் அழுத னள் என்னும்போது அவள் அழுகைக்குக் குழல் இரங்கி இசைப்பது போல் என உவமை கூறினமை யால் அவள் சொல்லின் பொருளில் மட்டுமன்றிச் சொல்லிலும் இனியள் எனக் கொள்ளலாம். முத விரண்டு காரணங்களாலும் ஒருவனுக்குத் தன் மனைவி யிடம் நீங்கா அன்பிருப்பின் உண்ணுதலும் (இதழ் சுவைத்தல்) உயிர்த்தலும் உற்றறிதலும் முறையே நிகழ்வனவாம். கண்ணகி அவ்விரண்டும்—காட்சியும் இன்சொல்லும் உடையவளாதலின் உண்ணற் குரிய வளாகின்றாள். அரசியாதலினாலும் கற்புடையளாத லினாலும் தூய்மை யுடையவளாதலின் உண்டற்குரி யளே, பரத்தையர் போல் பிற நறும் பொருள்களால் மணம் எய்தியதன்றி இயற்கை மணத்தைத் தன் கற்பால் எய்தியவளாதலின் உயிர்த்தற்கும் உரியள் என்க. சிறந்த கற்பினள் என்பதைப் பரணர் "யாம் தன் தொழுதனம்" என்று கூறியதால் விளக்கினார். இதனால் சான்றோர் தொழும் கடவுட் கற்பினள் என் பது போதரும். இவற்றால், உற்றறிதற்கும் உரிய ளான கண்ணகியைப் பேகன் துறந்தமைக்குக் கார ணம் என்ன? இவ்வினாவினை நக்கீரரிடம் வினவுவோ மாயின் 'ஊழ்' என்றே விடையிறுப்பர். அவர் விடையிறுக்கும் முறையினை யீண்டு விரிப்பிற் பெருகு மாதலின் அதனை விடுத்து நாமும் ஊழே காரணம் என்று கூறிமேற் சொல்வோம்.

வள்ளுவர் கூறிய குறளுக்கேற்பக் கண்ணகியை ஐம்புல நுகர்ச்சிக்கும் உரியவளாக்கி, இத்தகை

யானை—அதாவது பிரிதற்குரிய காரணம் ஒன்று மிலானைப் பிரிந்து, 'அருளாயாகலோ கொடிதே' என்ற பரணரின் 'பிரிந்தோர்ப் புணர்க்குந்திறன் போற்றற் குரியதாகும். இங்ஙனம் கூறிய பரணர் மனமகிழ வேண்டிப் பெரிதும் பரிசில் ஈந்தனன் பேகன். பரணரோ அதைப் பெற மறுத்து "பேக! யான் பசித்து வந்தேனில்லை. முன்போல் பசித்த சுற்றம் சூழ்ந்த பாரமும் உடையேனல்லேன். நின்பால்யாம் இரக்கும் பரிசில் யாதெனின், இன்று இரவே சென்று துன்புற் றுறையும் நின்மனைவியின் துயரைக் களையவேண்டு வதேயாம்" என்றனர்.

மடத்தகை மாமயில் பனிக்கும் என்றருளிப்
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக!
பசித்தும் வாரேம் பாரமும் இலமே
களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்
நயம்புரிந் துறையுநர் நடுங்கப் பண்ணி
அறஞ்செய் தீமோ அருள்வெய் யோயென
இஃதியாம் இரந்த பரிசில் அஃதிருளின்
இனமணி நெடுந்தேர் ஏறி
இன்னா துறைவி யரும்படர் களைமே.

(புறம். 145)

என்ற பாடலைக் காண்க. பேகனை விளிக்கும்போதே 'பயன்படுத்த அறியாத் தன்மையுடைய மயிலுக்குப் படாம் ஈந்த கெடாத நல்ல புகழையுடைய பேகனே' என விளித்தார். அஃறிணைப் பொருளும் நின்னால் பயன் அடைந்ததென்னின் நின்மனைவியாகிய இவள் பயன் பெறாதது வருந்தத்தக்கது என்றும், "மயில் மடத்தகையது; இது நின்படாத்தின் பெருமையறி

யாதது ; ஆனால் இவளோ அறிவினள் ; நின்னால் பயன் பெறக் கூடியவள் நின் அருமையை அறிபவள்'' என்றும், கெடா நல்லிசையுடையை யாதலின் இவட்கு அருளாதுவிடின் அது கெடும் என்றும் குறிப்பால் கூறி அறிவுறுத்தினார் பரணர். 'பசித்தும் வாரேம் பாரமும் இலமே' என்று அவன் பரிசிலை யிப்பொழுது பொருட் படுத்தாமையைப் பெருமிதத்தோடு கூறினார்.

ஏனை அரிசில் கிழாரும், பெருங் குன்றூர் கிழாரும் தாம் இரக்கும் பரிசில் கண்ணகியின் துயர்களைய வேண்டி அவள்பால் செல்வதே என்ற கருத்துப் படவே பாக்களைப் பாடியுள்ளனர். எனவே, அவர்களது பாடல் ஈண்டெழுதாது விடப்படுகின்றன. இக்கட்டுரையால் சான்றோர்கள் பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்புடையோர் என்பது தெளியலாம். அகப்பொருள் நூற்களில் தலைவன் தலைவியை யடைதற்கு இயலாதாயின் 'மடலேறுதல்' என்பது வழக்கம் என்பது காணப்படுகின்றது. தன்னால் காதலிக்கப்பட்ட தலைவியை மணம்பெற இயலாத தலைவன் அவள் வடிவத்தை எழுதிப் பிடித்துக்கொண்டு பனைமடலால் செய்யப்பட்ட குதிரைமேல் இவர்ந்து ஊர்வலம் வருவன். இதற்கே மடலேறுதல் என்று பெயர். இப்படி வர பனைமடல் அவனுடலைக் கீறிவிடும். அவ்விடத்து இரத்தம் மாறுபட்ட நிலையில் ஒழுகுமாயின் அவன் பிடித்திருக்கும் பெண்ணிடம் மிக்க காதல் உடையன் இவன் என உணர்ந்து சான்றோர்கள் அவ்விருவரையும் மணம் புணர்த்துவர். இதற்காகவே தலைவன் மடலேறு தலைக் கைக்கொள்வன். எனவே 'மடலேறுதல்' என்ற அகப்பொருள் துறையும் சான்றோர்க்கு ஒற்றுமைப் படுத்திவைக்கும் பண்புண்டென்பதை விளக்கும்.

9. அவரவர் கடமைகள்

ஒவ்வொருவர் கடமைகளும் தத்தமக்கேயன்றிப் பிறர்க்கெனவும் இருத்தல் வேண்டும். பிறந்த ஒரு குழந்தை காளைப்பருவம் அடையுந்துணையும் அவனைப் பற்றிய கவலையை மேற்கொண்டு கடமைகள் ஆற்றற்குரியார் யாவர் என்பதைப் பொன்முடியார் என்ற புலவர் கூற்றால் அறியலாம்.

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

(புறம். 312)

இப்பாடல் மறக்குடியில் வந்த ஒரு தாய் தன் மகனுக்கு எவ்வெவர் பொறுப்பேற்றுக் கடமைகள் ஆற்றக்கூடியவர்கள் என்பதைக் கூறுவதாக அமைந்துளது. இதன் விரிவைக் காண்பாம்.

தாயின் கடன் பிள்ளையைப் பெற்றுக் காப்பாற்றுதல். பிள்ளையைப் பெறுதலும், வளர்த்தலும் மிக மிக அருமை. பிறந்த குழந்தை காளைப்பருவம் அடையும்துணை தாயின் வளர்ப்பிலேயே இருத்தற்குரியது. அக் குழந்தையை வளர்க்கும் முறையினை உவமைகள் மூலமாகத் துறைமங்கலம், சிவப்பிரகாச சுவாமிகள் விளக்குவர்.

மிடியன்ஒரு செய்யாளன் அச்செய்
விளையக் காக்கும் செயல்போலப்
படியில் கல்வி விரும்பினோன்
பாடம் போற்றும் அதுபோல
ஒடிவில் செங்கோன் மனுவேந்தன்
உலகம் புரக்கு மதுபோல
கொடிய நோன்பு செய்தீன்ற
கொடியை வளர்த்தாள் மோகினியே
(பிரபுலிங்கலீலை மாயை உற். 49)

என்றது காண்க. மோகினி என்பாள் தன் மகள் மாயையை வளர்த்தமுறையினைக் கூறியது இப்பாடல். விளவலதேய அரசன் மமகாரன் என்பானுக்கு மனைவி மோகினி. பல்லாண்டாக மகப்பேறின்றிப் பின் மாயை என்ற பெண் மகவினைப் பெற்றனள் மோகினி. வறியன் ஒருவன், தனது ஒரு காணியினை நன்றாக விளைய வேண்டி அல்லும் பகலும் காத்து வருவதுபோலவும், கல்வியில் விருப்புற்றோன் எந்நேரத்தும் தனது பாடங்களை நினைவு கூர்ந்து போற்றுவதுபோலவும், அரசன் நெறிமுறையின் உலகம் புரப்பது போலவும் மோகினி தனது மகள் மாயையைப் போற்றி வளர்த்தாள் என்று சிவப்பிரகாச சுவாமிகள் கூறுகின்றார்கள். உவமைகள் மூன்றும் எண்ணி எண்ணி மகிழ்தற்குரியன.

வறியன் தனது நிலம் விளையவேண்டிக் காக்கின்றான். விளைநில அழிவுக்குரிய காரணம் பலவும் பிறரால் நிகழக்கூடியன. தான் சேர்ந்தாலன்றித் தன்னால் அழிவு நேராது. எனவே, அவன் பிறரால் வரும் தீங்கு குறித்தே நிலத்திற்குக் காவலை மேற்கொள்ளு

கிருன். காவலாளியை அமர்த்தவும் தன்னிடம் பொருளில்லை. காவலாளி சற்றுச் சோரினும் அழிவு நேரும். ஆதலின் தானே காவலை மேற்கொள்கின்ருன். அது போல மோகினியும் பிறரால் விளையும் கேடு வராவண்ணம் ஒரே மகளை வளர்த்தாள்.

கல்வி பயில்வோன் தனது முயற்சியிஞல் பயிலல் வேண்டும். அதற்கு வரும் இடையூறுகள் தன்ருலேயே மிகுதியும் வரும். ஒரே ஊக்கத்துடன் இருப்பவன் பிறரால் வரும் தீங்கினைப் பொருட்படுத்தமாட்டான். ஆதலின் தன்பால் சோர்வு முதலிய இல்லாமல் நீக்கிப் பன்முறையும் நினைவு கூர்ந்து போற்றுவன். அது போலத் தன்ருல் தீங்கு நேராவண்ணம் மோகினி வளர்த்தாள்.

அரசன் உலகைக் காக்குங் காலத்தில் தன்ருலும் பிறராலும் தன் மக்கட்குத் தீங்கு நேரலாம். அன்றி, தன் மக்களாலும் மக்கட்குத் தீங்கு நேரலாம். அவையின்றிக் காத்தல்வேண்டும். அதுபோல மோகினியும் தன்ருலும், பிறராலும், தன் மகளாலும் வரக்கூடிய தீங்குகளை வராமல் தடுத்து மகளை வளர்த்தாள்.

முதல் உவமைக்கு உடல் உழைப்பு மிகுதியும் தேவை. இரண்டாவது உவமைக்கு மன நினைவு மிகுதியும் தேவை. மூன்ருவதற்கு அவ்விரண்டும் தேவை. மோகினியும் தன் மகளைத் தன் செயலாலும் மனத்தாலும் பொருந்த வளர்த்தாள். வயல் விளைவு பாழ்படற்கும், கல்வி விளக்கமுருமைக்கும் வறியனும் கல்வி பயில்வோனும் காரணமாவரேயன்றி, வயல் விளைவும், கல்வியும் காரணமாகா. மாயை தீங்குறின் மோகினி அதற்குக் காரணமாவளேயன்றி மாயை

காரணமாகாள். ஒரு குழந்தை தானே பிற உணவுகளை உண்டல், நடத்தல் போன்ற தொழில்களைச் செய்வதற்கு முன்னர் படுக்கையிற் கிடக்குங் காலத்தில் நோயுறுமேல் அதற்குக் காரணம் அதனைப் போற்றுவோரின் தவறுதலே யன்றோ? அரசன் தன்னாலேயே யன்றிப் பிறராலும் தன் மக்களாலும் வரும் தீங்கை நீக்குதல்போல மோகினி, தன் மகள் தவழும் பருவத்தில் தன்னாலும் தன் மகளாலும் பிறராலும் வரும் தீங்கை நீக்கி வளர்த்தாள். எனவே, குழந்தையின் கால வளர்ச்சிக்கேற்ப வளர்த்தாள் என்னலாம்.

வறியன் தனது விளைவை முதலில் தான் நுகர்ந்து பின் பிறர்க்கீகின்றான். கல்வி பயில்வோன் முதலில் தான் கற்று அறிஞனாகிப் பின் பலரை அறிஞராக்குகின்றான். மோகினியும் மகளை வளர்த்து அவள் அழகு கண்டும், மழலை கேட்டும் மகிழ்ந்து, பிறரைப் பின் மகிழ்விக்கின்றாள். அரசனும் மக்களை மகிழ்வித்துத் தான் மகிழ்கின்றான்.

இவ்வாறு நாம் எண்ணி மகிழும்படியாக மேற்பாடல் அமைந்திருக்கின்றது. இங்ஙனம் வளர்க்குங் காலத்தில் ஏற்படும் இடையூறுகளை மன அமைதியுடன் பொறுத்து வளர்த்தல் பொறுப்புணர்ந்து ஆற்றும் தாய்க்கே இயல்வது ஆதலின், "ஈன்று புறந் தருதல் என்றலைக் கடனே" என்று தாய் கூறினாள்.

இனித் தந்தையின் கடனைக் காண்போம். பொய்யில் புலவர் வள்ளுவனார்,

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்றார். எனவே மகனை அவையத்து முந்தியிருக்கச் செய்யவேண்டுமாயின் அவனைச் சான்றோன்

ஆக்குதல் வேண்டும். அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை பிறர் தீமை சொல்லாமை, பணிவுடைமை, தன் தோல்வியைத் தன்னின் மேம்பட்டாரிடமேயன்றிக் கீழாயினாரிடத்தும் ஒப்புக்கொள்ளுதல், இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தல் முதலிய நற்குணங்களில் "ஊழி பெயரினும் தான் பெயரா நிலை" யுடையனாக்குதல் வேண்டும். தன்னாலோ பிறராலோ அன்றி மகனாலோ வரும் இடையூறுகளுக் கஞ்சாது அவனைக் கல்வி கேள்விகளில் வல்லுநன் ஆகச்செய்து மேற்கூறிய நற்பண்புகளையும் அவன் எய்துமாறு குறிக்கொண்டு காத்தல் தந்தையின் கடமையாகும். இன்றேல் அம் மகன் அவனது பிற்காலத்தில் தந்தை தனக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யத் தவறியமை குறித்து வருந்த நேரிடும்.

"அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னும் ஆடையும் ஆதரவாய்க்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்கும் என்னைக் குறித்ததல்லால்
துள்ளித் திரிகின்ற காலத்தி லேயென் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்தில னேதந்தை யாகிய பாதகனே"

என்று ஒருவன் கூற்றாக அமைந்த பாடலைக் காணலாம். தந்தை தன் மகனைக் கல்வியறிவாளனாகவும் சான்றோனாகவும் செய்யவேண்டுவது கடமை என்பதை உணர்ந்து நடக்கவேண்டும். ஆதலின் "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்றாள் அத் தாய்.

"வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக்கடன்" என்றாள். தான் மறக்குடியினளாதலின் தன் மகன் ஒரு பெரு வீரனாகவேண்டும் என்னும் நோக்கத்தினளாயினள். அவனுக்குப் பல தொழிலாளர் செய்ய

வேண்டிய கடமைகளும் உள. அத் தொழிலாளர்களுள் தன் மகனளவில் மிகச் சிறந்தவன் கொல்லனே. தன் மகனின் போர்த் தொழிலுக்குப் பயன்படுவது வேல். ஆகவே, கொல்லனே தன் பொறுப்புணர்ந்து வேல் வடித்துக் கொடுக்கக் கடவன். பிற தொழிலாளரும் தம் கடமை யறிந்து தன் மகனுக்குத் தொழில்புரிந்து உதவக் கடவர் என்றெண்ணினுள்.

அரசன் கடமையென்ன? மக்களுக்கு ஒழுக்கத்தை உண்டுபண்ணுதலாம். "நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே" என்ருள் தாய். "பிழையுயிர் எய்தின் பெரும் பேர் அச்சம்" என்று செங்குட்டுவன் கூறினுன். மக்கள் ஒழுக்கத்தினின்றும் தவருதவாறு பாதுகாத்தல் அரசனின் கடமை. அரசன் தான் நன்னெறியில் நடந்து மக்களேயும் நடக்கச்செய்தல் வேண்டும். அரசன் நெறி தவறுவானேயாளுல் மக்களும் நெறிதவறுவர். நெறிதவறிய அரசனின் நாட்டில் கடவுள், சான்ருேர், கற்புடைப் பெண்டிர்கள் இருக்க மாட்டார்கள். இவர்கள் இருக்கும் நாட்டில் அரசன் நெறிதவறமாட்டான்; மக்களேயும் தவருது காப்பான். அதனுலன்ருே, தன் கணவனேக் கொன்ருன் பாண்டியன் என்றறிந்து துயருற்ற கண்ணகி, இம் மதுரையில் "தெய்வமும உண்டுகொல்", "சான்ருேரும் உண்டுகொல்" "பத்தினிப் பெண்டிரும் உண்டுகொல்" என்பாளாயினள். அதனுல்தான் மறக்குடியினளான நம் தாய் "நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே" என்ருள். ஆனுல், ஈண்டொரு வினு இயற்கையில் எழ வேண்டுவதே. தந்தை மகனேச் சான்ருேனுக்கிய அளவிலேயே ஒழுக்கமுடையவனுகவும் ஆக்கியிருப்பானே? அரசன் கடனுகச் சொல்லவேண்டுவதெதற்கு

என்பதே அவ்வினா. ஆம் தந்தையே மகனை ஒழுக்க முடையவனாகச் செய்துவிடுவன். மகனைப்பற்றிய பொறுப்புக்கள் யாவும் ஒரு குறிப்பிட்ட கால அளவி லேயே தாய் தந்தையர்கட்கு முடிந்துவிடுகின்றன. பின்னர் மகனின் கடமை தொடங்கிவிடுகின்றது. அக் காலத்தில் மகன் தன் விருப்பப்படி கூட்டினின்றும் விடுதலையான பறவை போலச் செல்லககூடியவன். அவன் தன் வாழ்க்கையை மேற்கொண்டு தொடங்கு கையில் தந்தை ஆற்றிய கடமையாற் பெற்ற குண நலங்களைத் துணைக்கொண்டு தொடங்குகின்றான். இக் காலத்தில் மகன் இருமுது குரவர்களுக்குக் கடமைப் பட்டுவிடுகின்றான். இக் காலத்தில்தான் மகன் தன் னைக் காத்துக்கொண்டு செல்லவேண்டும். அங்ஙன மன்றி ஊழ்வயத்தாலேனும் பிறகாரணத்தாலேனும் வழுவினால் அவனைத் திருத்துதல் அரசனுடைய கடமையாகும். அதனால்தான் செங்குட்டுவன் "பிழை உயிர் எய்தின் பெரும்பேரச்சம்" என்றான். எனவே, அரசனின் கடமை, மக்களை நெறிதவறாது நடத்திக் காத்தல் வேண்டும் என்பதே.

தாய், தந்தை, தொழிலாளி (கொல்லன்), அரசன் ஆகியவர்களின் கடமைகளைப் பெற்றுக் காளைப் பரு வம் கண்ட மகனின் கடமை என்ன? தாய் தான் மறக்குடியினளாதலின் அதற்கேற்ப மகனின் கடமை யைக் கூறினாள். போர்க்களம் சென்று களிறுகளை எறிந்து கொன்று வென்று மீள்வதே கடன் என்றாள். தனக்கு எவ்வெவர் கடமைகள் ஆற்றினார்களோ அவ் வவர்க்குத்தான் கடமைகள் ஆற்றற்குரியன் மகன். அதனால், சான்றோன் எனக் கேட்டு ஈன்ற பொழு திற் பெரிதுவக்கச் செய்யவேண்டும் எனத் தனக்

காற்றவேண்டிய கடமையையும், "இவன் தந்தை என்னோற்றான்" என்று பிறர் கூறும்படியான புகழைத் தந்தைக்குத் தருதல் வேண்டும் எனத் தந்தைக் காற்ற வேண்டிய கடமையையும் மகனுக்குரிய கடமைகளாகக் கூறாது, 'களிறெறிந்து வெற்றியுடன் பெயர்தலே'யே கடமையாகக் கூறினாள் தாய். காரணம் தான் மறமகளானமையே. தாய் தந்தையரைப் பேணல் முதலிய கடமைகள் யாவும் அவனுக்கு, தன் தாய் வளர்த்த அருமையும், தந்தை அளித்த சால்பும், அரசன் அளித்த நன்னடையும் ஆகியவற்றால் இயற்கையில் எய்தலான், அவற்றைவிட்டு, வெற்றியுடன் மீளுதலையே கூறினாள். அதனிற் சிறந்த புகழும், அதுகேட்டு மகிழும் மகிழ்ச்சியும் அளவிடற்பால அல்ல. மேற்கூறிய வளர்த்தல், சான்றோனாக்கல், நன்னடை நல்கல் ஆகிய கடமைகள் பிறர்க்கும் உரியவாயிருப்பச் சிறப்புப்பற்றி ஒவ்வொருவர்க்கே உரியவாக்கினாற்போல பிற கடமைகளும் மகனுக்குளவாயினும் சிறப்புப்பற்றி "வெற்றியுடன் பெயர்தலையே" உரித்தாக்கினாள். தனது வெற்றியால் தன் நாட்டிற்கே நன்மை செய்தவனாவான் மகன் என எண்ணினாள். ஒரு காளை தனது நாட்டில் பற்றுகொள்ளுதல் அவன் கடமை அன்றோ? அதனாலேயே "ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக் களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடன்" என்றாள் தாய். என்னே தாயின் அறிவு! என்னே தாயின் கடமை யுணர்ச்சி!!

ஒரு தாயின் கூற்றில் வைத்துப் பாடிய பொன்முடியாரின் கூற்றால் ஒவ்வொருவரும் அவரவர் கடமைகளை உணர்ந்து தத்தம் கடமைகளை ஆற்றவேண்டும் என உணரலாம்.

10. உண்டாலம்ம இவ்வுலகம்.

உண்டா லம்மவிவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்;
புகழ்எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே. (புறம் 182)

இது, கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி பாடல். இவரது பெயரைக் கொண்டு இவர் ஒரு பாண்டிய அரசர் என்றும், கடலிற் கலம் செலுத்திப் போர் புரியச் சென்ற காலத்தில், கடலிடையே மாய்ந்தவர் என்றும் நாம் உணரலாம். இவர் 'இவ்வுலகம் சான்றோராலேயே உளதாகும்; சான்றோரில்லையேல் இவ்வுலகம் இராது', என்ற முடிந்த கருத்துடையார் என்பது இவரது பாடலால் விளங்குகின்றது. இனி இவர் கூறும் சான்றோர் பண்புகளை வரலாற்றுச் சான்றுகள் கொண்டு உணர்வோம்.

சான்றோர்க்குள்ள பண்புகளுள் இப்பாடலில் முதற்கண் உள்ளது, "இந்திரர் அமிழ்தம் இனிதெனத் தமியர் உண்ணலின்மை" "மருந்தே யாயினும் விருந்தோடுண்" என்பதற் கேற்பச் சான்றோர் விருந்து புறத்ததாகத் தாம் உண்ணாது, அவர்களையும் உடன்கொண்டே கலந்துண்பர். தாம் உண்ணுவிடினும் விருந்தினரையே உண்பிப்பர். அதியமான் நெடுமான் அஞ்சியே இதற்குச் சான்றுவான்.

சேரநாட்டுத் தகடூரை ஆண்டவன் அதியமான் நெடுமான் அஞ்சி. இவன் ஒரு வள்ளல். புலவர்களைப் போற்றிய புரவலன். ஔவையார் என்னும் பெண் புலவரால் பெரிதும் புகழ்ந்து பாடப்பட்டவன். இவன் ஒரு நாள் ஒரு மலைப்பக்கம் சென்று கருநெல்லிப் பழம் ஒன்று கொண்டு வந்தான். அப்பழம் உண்டார்க்கு உடல் வலிமையைத் தந்து உயிர் வாழ்க்கையை நீட்டிக்கச் செய்யும் இயல்புடையது. பழத்தின் இயல்பினை முன்னரே கேட்டறிந்த அஞ்சியானவன் அப்பழத்தினைத்தான் உண்ண நினைத்திலன். "நீண்ட காலம் உயிர்வாழ்க்கையினை மேற்கொள்ளத் தக்காரே இதனை உண்ணக் கடவர்; யான் இதனை உண்டு நீண்ட வாழ்நாள் பெறுதலைக் காட்டிலும், உலகிற்குப் பெரும்பயன் அளிக்கும் ஔவையார் இதனை உண்டு நீண்ட வாழ்நாள் பெறுவதே சாலச் சிறந்ததாகும்" என எண்ணியவனாய் அப்பழத்தின் அருமையைக் கூறின் மறுக்கவும் கூடும் என்று, கூறாமலே ஔவையாரை உண்ணச் செய்தனன். உண்ட ஔவையார், பின்னரே பழத்தின் இயல்பினையும், அது பெறுதற்கருமையையும் கேட்டுணர்ந்தனர். அஞ்சியின் மனநிலையை உணர்ந்தனர். தனக்கென முயலாது பிறர்க்கென முயன்று வாழும் பண்பினை ஓர்ந்தனர். ஓர் கனியினைத் தான் உண்ணாது விருந்தினர்க்குக் கொடுத்தான் அஞ்சியென்றால் மிகுதியாக உள்ள தன்னுடைய நுகர் பொருள்களைப் பலர்க்கும் பகுத்துண்ணும் பண்பினன் எனவும் கூறவேண்டுமோ?

இரண்டாவதாகக் கூறப்பட்ட பண்பு 'முனிவின்மை' முனிவின்மையாவது யாவர் மாட்டும்

வெறுப்பில்லாமை. சான்றோர்க்கு வெறுப்பே இராது. இருத்தலாகாது என்பதன்று. இதுவே கருத்தாயின்,

"ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் மற்றென்
சான்றோர் முகத்துக் களி"

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்த லரிது"

என்பன போன்ற குறள்கள் தோன்றுவனவன்றோ? அதனால், முனிவிலர் என்பதற்கு, ஒருவர் தனக்குச் செய்யத்தகாத குற்றத்தைச் செய்தாராயின் அது செய்தற்குரிய காரணத்தை ஓர்ந்து அதனைப் பொறுப்பர்; வெறுப்படையார், என்பதே கருத்தாகக் கொள்ளவேண்டும். குற்றம் செய்தாரது நிலையினையும் கருதுவர் அவர். இதற்கேற்ற வரலாறொன்று காண்போம். "சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை" என்பான் ஒரு சேரவேந்தன். இவனும் புலவர் பலரைப் போற்றிய புரவலன். கொடைத் திறன் உடையவன். புலவர் பெருமைக்கு அரசர் பெருமை தாழ்ந்ததே என்றெண்ணும் எண்ணம் உடையவன். இவனது ஆட்சிக் காலத்தில், வெற்றி முரசு வைக்கப்படும் கட்டிலில் யாரும் படுத்தல் கூடாது என்பது சட்டம். யாரேனும் தவறுவராயின் அவர் உயிர் இழப்பர். ஒரு நாள் மோசி கீரனார் என்ற புலவர் அரசனைக் காணவந்தார். நெடுந்தொலைவிலிருந்து வந்த களைப்பால், வெற்றி முரசு கழுவப் படற்கு எடுத்துச் செல்லப்பட, அதன் கட்டிலின்மேல் ஏறிப் படுத்துறங்கினார். சின்னேரத்தில் ஆங்குப் போந்த அரசன் கண்டு, உறங்குபவர் புலவர் என்பதை உணர்ந்து, தனது ஆணையை நிறைவேற்றாது,

'அவர் யாதொரு இடையூறும் இன்றித் தூங்கி விழிக்கவேண்டும்' என்னும் எண்ணத்துடன் ஒரு விசிறிகொண்டு மெல்ல வீசினன். புலவர் உறங்கி விழித்துப் பார்க்கையில் அரசன் வீசுவது உணர்ந்து அவனின் பண்பினை வியந்து பாடல் பாடுவாராயினர். "அரசே! உண்மையறியாது கட்டிலின் ஏறிப்படுத்த என்னை, நீ, நின்முறைப்படி வாளால் வெட்டி வீழ்த்தியிருக்கலாம். அங்ஙனம் வீழ்த்தாமையே நீ நன்றாகத் தமிழ் முழுமையும் உணர்ந்துள்ளாய் என்பதைக் காட்டுகின்றதே! அதனுடன் அமையாது விசிறி கொண்டு வீசுவதேனோ? இம்மையிற் புகழுடையோரே மறுமையிற் றுறக்க இன்பம் பெறுவர் என்று ஆன்றோர் கூறியதைக் கேட்ட காரணந்தானோ?" என்று வியந்தனர் அவர். இப்பெருஞ்சொல் இரும்பொறையின் குணநலத்தை நாம் எவ்வாறு பாராட்டுவது? புலவர் செய்தாங்கு யாரேனும் பிறர் உறங்கியிருப்பரேல் அரசன் வெட்டியே வீழ்த்தியிருப்பன் அன்றோ? ஆம். ஆனால் அரசன் ஆணையை அறியாதார் பிறர் அவ்வாறு செய்திருப்பின் அரசன் யாது செய்வன்? புலவர் அரசன் தன்னைக் கொல்லாமைக்கு அவன் தமிழ் முழுதும் உணர்ந்தமையையும், விசிறி கொண்டு வீசினமைக்கு, "இவணிசை யுடையோர்க் கல்லது அவணது,உயிர்நிலையுலகத்துறையுள் இன்மை, விளங்கக் கேட்ட" தையும் காரணங்களாக்கினர். ஆனால், நாம் கூர்ந்து நோக்குகையில், புலவர்க்குத் தன் ஆணை தெரியாமையும், அவர் புலவராக இருந்தமையுமே அரசன், வாளாற்கொல்லாமைக்கும் விசிறியால் வீசினமைக்கும் காரணங்களாம் என்பது போதரும். இதனால், 'மனமியைந்து ஒருவர் தவறிழைப்பரேல் அவ

ரைச் சான்றோர் வெறுதிரார், மனம் இயையாது தவறு செய்வரேல் அவரை வெறுர்' என நாம் அறியலாம். ஆனால் மனதுடன் தவறிழைப்பாரிடத்து வெறுப்புக் கொள்ளினும் அவரிடம் பகைமை கொள்ளார். இன்னா செய்த அவர்க்கும் இனியவே செய்து அவரையும் நாளடைவில் தம்மகப்படுத்துவர். அதனாலேயே முனிவுகொள்ள வேண்டுவாரிடத்தும் முனிவு கொள்ளாமையும் சான்றோர்க்கு ஒரு பண்பாயிற்று.

மூன்றாவது பண்பு "பிறர் அஞ்சுவது அஞ்சித் துஞ்சாமை." பிறர் அஞ்சத் தக்க பழிபாவங்கட்குத் தாமும் அஞ்சி அவ்வச்சமேலீட்டால் யாதொரு கருமமும் செய்யாது வாளா மடிந்திருக்கும் திக்குணம் சான்றோர்பால் இராது. அவர் "அறிவது அறிந்து அடங்கி அஞ்சுவது அஞ்சி உறுவது உலகுவப்பச் செய்யும்" பண்பினர். இப்பண்பிற்கும் ஒரு முடியுடை வேந்தனையே சான்றாகக் காட்டலாம். சேரன்—செங்குட்டுவன் அரசப் பிறப்பு துன்பத்தையே தரும் என்று கூறுமிடத்து,

"மழைவளங் கரப்பின் வான்பேர் அச்சம்
பிழையுயிர் எய்திற் பெரும்பேர் அச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்"

(சிலப். 25, 95-104)

என்று கூறினன். அவன் மழை வளங்காக்குங் காலையும் பிழை உயிர் எய்துங்காலையும் அஞ்சுதற்குக் காரணம், 'மன்னன் கொடுங்கோலாலேயே அவை விளைந்தன' என மக்கள் பழிப்பர் என்பதே. இங்ங

னம் மக்கட் பழிக்கு அஞ்சிய செங்குட்டுவன் வாளா மடிந்திருந்தானல்லன். தனது அரசு முறையினையும் ஒழுங்குறவே காத்து வந்தனன். பகைவர்களை வெல்வதிலும் சிறந்தவனாயினன் அதனால் சான்றோர் "பிறர் அஞ்சுவது அஞ்சித் துஞ்சியிரார்" என உணரலாம்.

நான்காவது பண்பு "புகழ் எனின் உயிரும் கொடுத்தல்". சான்றோர் உயிரைக் கொடுத்தேனும் புகழை எய்துவர். கோயமுத்தூர் மாவட்டம் உடுமலைப் பேட்டைக் கோட்டத்திலுள்ள குழுமம் என்ற ஊரின் அருகில் குதிரை மலை என்பதொன்றுளது. அம்மலை பழங்காலத்தில் முதிரமலை எனப் பெயர் பெற்றிருந்தது. குழுமம் குழுமூர் என்றிருந்தது. அம்மலையினையும் அதனைச் சார்ந்த ஊர்களையும் ஒரு காலத்தில் குமணன் என்ற வள்ளல் ஆண்டு வந்தான். அவன் புலவரைப் புரந்து புகழ் எய்தியவன். ஒருகால் அவன் தன் இளவலால், அரசிழந்து நாட்டைவிட்டுக் காட்டிற்குத் துரத்தப்பட்டான். காடடைந்த குமணன் மிகவும் வறியநிலையில் வாடியிருந்தனன். இந்நிகழ்ச்சியை யறியாத பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் முதிரமலைக்கு வந்து ஆங்குக்குமணன் இல்லாததும், காட்டிற்குத் துரத்தப்பட்டதுமான செய்திகளைக்கேட்டு வருந்தி, நேரே காட்டகத்துப்போந்து, குமணனைக்கண்டுபாடிநின்றார். குமணன் புலவர்க்கு ஒன்றும் கொடாதநிலையில்தான் இருப்பதற்கு மிகவும் வருந்தியவனாய் நிற்கையில் அவனுக்கோர் எண்ணம் உண்டாயிற்று. அதாவது, தன் இளவல் தன் தலையைக் கொண்டுவருபவர்கட்கு மிக்க பரிசில் ஈவதாகப் பறைசாற்றி யிருப்பது நினைவிற்கு வந்தது. உடனே தன் உயிரை மதியாது அவரது கையில் தன் வாளை யீந்து, என் தலைதனைக் கொய்துசென்று தம்

பிகைக் கொடுத்து நும் வறுமையைக் களைமின் என்றான். உடனே சாத்தனார் வாளைப் பெற்றுக்கொண்டு அவனை நீங்கி, இளவலிடம் சென்று அவனை அறிவு கொளுத்தி மீண்டும் குமணனுக்கே அரசினை ஒப்புக் கொடுத்து அவன் கீழ் இருக்குமாறு செய்தார். வீணே மடிந்துபோம் உயிரைப் புலவர்க்கு வறுமை தீர்க்கு முகமாகப் பரிசிலாக ஈவதே சிறந்த புகழாகும் என எண்ணினான் குமணன். இதனால் சான்றோர் புகழெனின் உயிரும் கொடுப்பர் என நாம் உணரலாம்.

ஐந்தாவது பண்பு "பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளாமைமை". வாளைத்தந்த குமணனைப் பெருந்தலைச் சாத்தனார் தலையைக் கொய்திருப்பரேல் அவர்க்கு வறுமை நீங்கப் பெரிதும் பொருள் கிடைத்திருக்கும். அங்ஙனம் செய்தாரல்லர் சாத்தனார். "பழிமலைந்தெய்திய ஆக்கத்திற் சான்றோர், கழிநல்குரவே தலை" என்ற வள்ளுவர் கருத்து அவர்க்கும் உண்டு. அவரும் சான்றோரன்றோ? குமணன் தலையைக் கொய்திருப்பரேல் உலகம், அவரை, வள்ளலைக் கொன்ற கொலையாளியாகக் கருதும்.

ஆறாவதாகக் கூறப்பட்டது 'அயர்வின்மை'. அதாவது மனக் கவலையின்மை. மேற்கூறிய ஐந்து பண்புகளும் ஒருவரிடம் நிறைந்திருக்குமாயின் அவர்க்கு மனக் கவற்சியென்ப தொன்றிராதன்றோ? ஆனால் மேற்கூறப்பட்ட பண்புகள் ஒவ்வொன்றற்கும் தனித் தனி வரலாறுகள் காட்டியுள்ளோம். முதல் நான்கு பண்புகளுக்கும் அரசர்களையே எடுத்துக் காட்டுகளாகக் காட்டியுள்ளேம். ஆனால் அனைத்துப் பண்புகளும் ஒருங்கேயமைந்த அரசர் வரலாறு வந்த

வழி அறிந்து கொள்க. சான்ருேராதற்குரியர் அரசரே யன்றிப் பிறரும் ஆவர். அவர்களுடைய வரலாறுகளும் வந்த வழி அறிந்து கொள்க. இறுதியாக அயர்வின்றி யிருந்த ஒரு சான்ருேரை மட்டும் குறித்து இக்கட்டுரையினை முடிப்பேம் ஒருகால் பிசிராந்தையார் என்ற புலவரை நோக்கி மற்றைப் புலவர்கள் "நுமக்கு வயது மிக நிரம்பியும் நறை தோன்ருமைக்குக் காரணம் என்னை?'' என்ருர். அதற்கு அவர் விடையே பின்வரும் பாடல்.

"யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்,
மண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;
யான்கண் டனையரென் னிளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்ருேர் பலர்யான் வாழும் ஊரே." (புறம். 191)

''மனைவியும் அறிவுடையள்; மக்களும் அறிவினர்' குறிப்பறிந்து நடப்பர் ஏவலர்; அரசனும் அல்லவை செய்யாது நல்லவை செய்து காப்பன; சான்ருேர் பலரும் கூடி மகிழ்வர்; இவர்கள் சூழலில் இருக்கும் எனக்குக் கவலைக் கிடமில்லை; எனவே, நரையில்லை'' என்ருர் பிசிராந்தையார். "இன்னு செய்தார்க்கும் இனியவே செய்''யும் இயல்பினர் சான்ருேர் எனின் அவர்கட்குக் கவலை யெங்ஙனம் தோன்றும். பிசிராந்தையார்க்கு இயற்கையிலேயே கவலை யில்லையாயிற்று. சிலர் கவலை வருதற்குரிய காரணங்கள் நிகழவும் தமது குணத்தால் அதனைக் கொள்ளாது விடுவர். எவ்வாருயினும் சான்ருேர் 'அயர்விலராவர்' என நாம் கொள்ளுதல் வேண்டும்.

மேற் கூறப்பட்ட பண்புடையார் யாவரும் தமக்கென முயலாமல் பிறர்க்கென முயன்று வாழும் சான்றோர் எனக் கொள்ளலாம். இங்ஙனம் அவ்வக்காலங்களில், பிறர்க்கென முயலும் சான்றோர்கள் இருத்தலால்தான் உலகமும் இருந்து வருகின்றது. இவ்வுண்மையை ஓர் அரசரே நமக்கு அறிவுறுத்தினர். அவரும் சான்றோர் நிரலில் சேர்தற் குரியரே யாவர் என அவரது கூற்றாலேயே நாம் உணரலாம்.

---

11. உலகின் உயிர்.

உலகம் உண்மைக்குக் காரணம் (மேற்கூறிய கட்டுரையில் கண்டபடி) "தனக்கென முயலா நோன்றாட், பிறர்க்கென முயலுநர் உண்மை"யே யாம். எனினும் இவ்வுலகிற்கும், உலகில் உள்ளவர்களான பிறர்க்கென முயலுபவர்கட்கும் இன்றியமையாது வேண்டப்படுவது உணவு. உணவின்றேல் உடல் வளராது. உடல் வளர்ச்சி இன்றேல் உயிர் வளர்ச்சி நிலைத்தல் இல்லை.

"உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்றார் திருமூலரும். எனவே உலகத்திற்கு உணவே மிக இன்றியமையாததாகின்றது. உடம்பிற்கே "உணவின் பிண்டம்" என்ற பெயரை இட்டனர் ஆன்றோர்.

"உண்டிமுதற்றே உணவின் பிண்டம்" (புறம். 18)

என்ற ஆன்றோர் வாக்கையும் காணலாம். உண்டி இல்லையாயின் உடல் அழியும். அழியின் உயிர்போம். எனவே, உயிர் நிலைக்க வேண்டுமாயின் உடலுக்குரிய உணவு வேண்டும். பசித்து வாடிய ஒருவனுக்கு

உணவு கொடுக்கின் அவனுக்குக் கொடுக்கப்பட்ட உணவு உயிருக்கே ஒப்பாகின்றது. அதனாலன்றோ,

"உண்டி கொடுத்தோர் உயிர்க்கொடுத் தோரே"

(புறம். 18)

என்றார் குடபுலவியனார். இதனால் உலகிற்கு உயிர் உணவே என்று கருதலாம். காவிரிப்பூம் பட்டினத்தைச் சார்ந்த உவவனத்திலிருந்த மணிமேகலையை மணிபல்லவத் தீவிற்கு எடுத்துச் சென்ற மணிமேகலா தெய்வம், மணிமேகலைக்கு மூன்று மந்திரங்களைப் பயிற்றியருளியது. வேற்றுருக் கொள்ளற் குரியது, வானிற் செல்லற் குரியது, பசியைப் போக்கற் குரியது என்பன அவை. பசியைப் போக்கும் மந்திரத்தைக் கூறுமிடத்து மணிமேகலையை நோக்கி, "மக்கள் யாக்கை உணவின் பிண்டம், இம்மந்திரம் பசியைப் போக்கும்; இதனைக் கைக்கொள்க" என்று கூறி வான்வழிச் சென்றது. பின்னர் மணிபல்லவத் தீவில் தீவதிலகை என்ற ஒரு காவல் தெய்வத்தால் அமுதசுரபி என்ற ஒரு அக்ஷய பாத்திரத்தைப் பெற்ற மணிமேகலை, அத்தீவதிலகையால் சில நல்லுரைகளும் கூறப் பெற்றனள். அத்தெய்வம்,

"ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை;
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே."

(மணி. 11, 92-96)

என்று இறுதியிற் கூறியது. உயிர் வாழ்க்கைக்கு உணவு இவ்வளவு இன்றியமையா திருப்பதால் உல

கிற்கு உயிர் உணவே என்னலாம். உணவுக்குரிய பொருள்களுள் நம் தமிழ் நாட்டில் மிகச் சிறந்தது நெல். அதனால் உலகின் உயிர் 'நெல்'லே என்னலாம்.

நெல் விளைந்து மக்கட்குப் பயன்படுதற்கு இன்றி யமையாது வேண்டப்படுவது நீர். "நீரின்றமையா துலகு." என்பது வள்ளுவர் வாக்கு. அவரே,

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை"

என்றார். எனவே உடலுக்கு வேண்டிய உணவை ஆக்குவது நீர் என்பது பெற்றும். அதனால் உடலுக்கு நீர் இன்றியமையாதது என்பதும் பெற்றும். "நீரின் றமையா யாக்கை" (புறம் 18) என்றார் குடபுலவிய னாரும். எனவே உலகின் உயிர் நீரே என்னலாம்.

மேற்கூறப்பட்ட நெல்லும் நீரும் உளவாவது மன்னன் நெறிமுறையின் ஆட்சியைச் செலுத்தினால் தான். இன்றேல் மாரி பொய்க்கும்; வாரி வளங்குன் றும்; "இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றும்; ஞாலமும் காவலர்ப் பழிக்கும்." (புறம் 36) அதனால் உலகிற்கு உயிர் மன்னனே யாவன்.*

---

* உலகிற்கு மன்னர் உயிர் என்பதுபோல மன்னனுக்கு உயிர் உலகம் என்பதும் உண்டு. "மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந் தன், தன்னுயிர்" (மணிமேகலை 7-11, 12) என்றது காண்க. இதனால் தனக்கு உயிர் உலகம் என்றும் அரசன் எண்ணக் கடவன் என்பது போதரும். தன்னுயிரைக் காப்பதுபோல் உலகினைப் புரக்கவேண்டும் அரசன் என்க.

"நெல்லுயிர் மாந்தர்க் கெல்லாம் நீருயிர் இரண்டும் செப்பின்
புல்லுயிர் புகைந்து பொங்கும் முழங்கழல் இலங்கு வாட்கை
மல்லலங் களிற்று மாலை வெண்குடை, மன்னர் கண்டாய்
நல்லுயிர் ஞாலந் தன்னுள் நாமவேல் நம்பி யென்றான்"

(சீவக. 2908.)

என்ற சிந்தாமணிப் பாடலையும் காணலாம்.

மேற்கூறிய கருத்துக்களையே கீழ் வரும் புறப் பாடல் தெரிவிக்கின்றது.

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், யானுயிர் என்ப தறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே. (புறம். 186)

இது மோசிகீரனார் பாடல். இம் முறையில் அரசிய லார் 'உலகின் உயிர் நாம்' என எண்ணிக் கடன் ஆற்றுவரேல் நாடு செழிப்புறும் என்பதில் ஐயமில்லை.

12. 'சான்றோன் நெஞ்சுறப் பெற்றோன்.'

ஒரு பழம்புலவர்; பொத்தியார் என்ற பெயரினர்; உறையூரிலிருந்து சோழநாட்டை ஆண்ட கோப்பெருஞ் சோழனின் அவைக்களப் புலவர்; ஏன்? நண்பினரும் ஆவர். அவர்க்கு வியப்பை யுண்டாக்கிய செயல்களைக் காணு முகத்தால் 'சான்றோன் நெஞ்சுறப் பெற்றோன்' கோப்பெருஞ் சோழன் என்பதைக் காண்பாம்.

கோப்பெருஞ்சோழன் தன் அரசினைத் துறந்து வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தான். வடக்கிருத்தல் என்றால், யாதேனும் ஒரு காரணத்தை மேற்கொண்டு வடக்கு நோக்கிப் பட்டினி கிடந்து உயிர் விடுதல் என்பது பொருள். இங்ஙனம் உயிர்விடக் காரணம் யாது? தன்னரசியலைத் துறந்து வடக்கிருந்தான் என்றால் யாருக்குத்தான் வியப்பாக இராது? அரசினைத் துறந்து காட்டிற்குச் சென்று தவம் இயற்

றுவர் அரசர் எனக் கேட்டுள்ளோம். பட்டினி கிடந்து உயிர்விடுதல் இல்லை. கோப்பெருஞ்சோழனே பட்டினிகிடந்து உயிர்விடத் துணிந்தான். இதுவே வியப்பிற்குரிய முதற் காரணமாயிற்று.

அரசியலில் இவனுக்குப் பற்றின்மையால் அதனைத் துறந்தானே என்னின், இல்லை என்று, விடையிறுக்க வேண்டியிருக்கின்றது.

நம் சோழன் அரியணையில் அமர்ந்து ஆட்சிசெய்து வருகையில் ஒருகால், அவனுக்கும் அவனுடைய மக்களுக்கும் அரசுரிமை காரணமாகப் போர் நிகழ்ந்தது. இப் போர்க்குக் காரணம் நன்கு புலப்படவில்லையாயினும் ஒன்றுமட்டும் நாம் உறுதியாகக் கூறலாம். மக்கள் இருவர்; அவர்கள் ஒன்றுகூடித் தந்தையை எதிர்த்தார்கள் என்றால், தக்க வயது வந்த தன் மக்களிடம் தந்தை அரசினை ஒப்படைத்திலன் என்றே கொள்ளவேண்டும். இவன் ஒப்படைக்காமைக்குக் காரணம் அவர்களின் ஆளும் திறம் இன்மையைக் கண்டதனால் அன்று. அவர்களும் ஆளுந்திறன் உடையவர்களே என்று நாம் அறியலாம்.

இரு சாரரும் போர் புரிந்துகொண்டிருக்கையில், அவர்கள் போரிடுவது தக்கதன்றென்றறிந்த புலவர் புல்லாற்றூர் எயிற்றியனார் சோழனிடம் சென்று பின் வருமாறு அறிவுறுத்தினர்.

"அரசே! நின்னை எதிர்க்கும் இவர்கள் நின் பழம் பகைவர்கள் அல்லர். நீயும் அவர்கட்குப் பகைவன் அல்லன்; நீ புகழுடன் ஆண்டு அப் புகழை இவ் வுலகிலேயே விட்டு வானுலகு செல்வாயாயின் நினது அரசு நின் மக்கட்கே சேரும்; அன்றியும், இவ்வினைஞர்கள்

தோற்றுப்போக நீ வெல்லின் நினக்குப் பின்னர் இவ் வரசுரிமையை அவர்க்கன்றி யார்க்குக் கொடுப்பாய்? ஒருவேளை நீ தோற்பாயேயானால், உன் பழம்பகைவர் களும் இகழ்ந்து மகிழ்வர்; நீயும் பழியெய்துவாய்; அதனால் இப்போரை விடுக. விண்ணவர் மகிழ்ந்தேற் றுக் கொள்ளத்தக்க நல்வினையை நீ செய்வாயாக.''

இங்ஙனம் அறிவுறுத்திய புலவரின் கூற்றுக்களை நாம் ஊன்றி நோக்குமிடத்துக், கோப்பெருஞ் சோழ னுக்கு அரசாட்சியில் மிக்க விருப்பம் இருந்தமையால், தக்க திறன் வாய்ந்த மக்களிடம் அதனை விடாமல் அவர்களையும் பகைத்துப் போர்புரிந்தான் என்றும், அவன் மக்களும்; பன்முறை தந்தையிடம் அரசுரிமை யை வேண்டியும் பயனின்மை யறிந்தே இருவரும் ஒரு முகப்பட்டு எதிர்ப்பாராயினர் என்றும் அறியலாம். இவ்வளவு பற்றுதல் கொண்டிருந்த சோழன் தனது அரசினைத் துறந்து வடக்கிருத்தலைக் கண்ட பொத்தி யார்க்கு வியப்பு மேலிட்டது. அதனாலேயே,

''நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே
எனைப் பெருஞ் சிறப்பினோ டீங்கிது துணிதல்''

என்று வியந்தார். இனி இரண்டாம் வியப்பிற் குரிய காரணத்தை நோக்குவோம்.

புல்லாற்றூர் எயிற்றியனாரால், ''மயங்காது செய் தல் வேண்டுமால் நன்றே'' என்றறிவுறுக்கப்பட்ட சோழன், பல்லறங்களையும் செய்து முடிவில் உயிர் துறக்க எண்ணினன். அதனாலேயே வடக்கிருத்தலை மேற்கொண்டான்.

இவனது உயிர் நண்பரும், ஆனால் இதுவரை தான் பார்த்தறியாதவரும் ஆன பிசிராந்தையார் என்பவர்

இவன் வடக்கிருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தார். இவர் வந்ததே பொத்தியாரின் இரண்டாம் வியப்பிற்குக் காரணமாயிற்று.

பிசிராந்தையார் பாண்டிய நாட்டினர்; பிசிர் என்னும் ஊரிற் பிறந்தவர். ஆந்தையார் என்ற பெயரினர். பாண்டிய அரசனின் அவைக்களப் புலவரும் ஆவர்; கவலையின்றி வாழ்க்கை நடத்தியவர். இவர், கோப்பெருஞ் சோழனின் பெருந்தன்மையைக் கேள்விப்பட்டு அவனை உள்ளத்தால் நட்புக்கொண்டார். அவனைச் சென்று காண்டற்கு விருப்பிருந்தும் வாய்ப்பின்றி யிருந்தார். யாரேனும் இவரிடம் 'நும் பெயர் யாது?' என வினவின் அதற்கு, என் பெயர் கோப்பெருஞ்சோழன் என்பாராயின், இவர் சோழன்பால் கொண்ட நட்பு, அன்பு முதலியவற்றை நாம் அளவிட முடியுமோ? கோப்பெருஞ் சோழனே, பிசிராந்தையார் என் பெயரைத் தன் பெயராகக் கூறிக்கொள்வர் என்று கூறியிருக்கிறான்.

"தன் பெயர் கிளக்குங் காலை யென்பெயர்
பேதைச் சோழன் என்னும் சிறந்த
காதற் கிழமையும் உடையன்" (புறம். 216)

என்ற அவன் கூற்றைக் காண்க. இவர், தம்மை 'நும்மரசர் யார்' என்று கேட்டோரிடம் "நுங்கோ யாரென வினவின் எங்கோ................கோழியோனே கோப்பெருஞ்சோழன்" (புறம் 212)

என்று கூறுவார். இவ்வளவு நண்புடையரான பிசிராந்தையார் தம் நண்பன் வடக்கிருக்கும் செய்தியினைக் கேட்டார். உடனே அவனுடன் தாமும் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்து வடக்கிருந்த

சோழனை யடைந்தார். அடைந்த நிலையைக் கண்ட வுடன் பொத்தியார் மிக வியந்தார். சோழன் வடக் கிருந்த நிலையினும் இது அவர்க்கு மிகவும் வியப்பைத் தந்தது. அதனால்,

"அதனினும் மருட்கை யுடைத்தே பிறநாட்டுத்
தோற்றம் சான்ற சான்றோன் போற்றி
இசைமர பாக நட்புக் கந்தாக
இனையதோர் காலை ஈங்கு வருதல்"

என்று வியந்தார். இவ்விரண்டு நிகழ்ச்சிகளும் தந்த வியப்புக்களைவிட வேறொரு நிகழ்ச்சி மிக்க வியப்பைத் தந்தது; அந் நிகழ்ச்சி புலவரின் நினைப்பு தான். புலவர், வடக்கிருக்குங் கோப்பெருஞ்சோழன் சொன்ன சொற்களை நினைத்தார். அந் நினைப்பினு லேயே மூன்றும் வியப்பு தோன்றிற்று.

அரசு துறந்து வடக்கிருக்கச் செல்லுங்காலையில் தன்னுடன் வடக்கிருக்கப் போந்த தன் நண்பர் பொத்தியாரை நோக்கி "நீர் இன்னும் மகப்பேறின்றி யிருக்கின்றீர்; ஆதலின், நன்கு போகம் துய்த்து மகப் பேறுற்றுப் பின் வந்து நம் பக்கல் அமர்ந்து வடக் கிருப்பீர் என்றான். பிறகு அவரையும், அவரனைய பிறபுலவர்களையும் நோக்கிப் பின்வருமாறு கூறினான்.

"அறிவுடையீர்! யான் வடக்கிருத்தலைக் கேள் விப்படின் பிசிராந்தையார் உடனே வருவர். அவரும் என்னுடன் வடக்கிருப்பர். ஆதலின் என் பக்கமாக அவர்க்கும் இடம் ஒழித்து வையுங்கள். நீவிர் ஐயங் கொள்ளலாம், எனது பெயரைக் கேட்ட அளவில் நட்புடைய ஒருவன் முன் பின் காணாத நிலையில் இருப் பவன் பல்லாண்டுகளாக மனத்தகத்துப் பயின்ற நட்

புரிமை கொண்டவனாயினும் உடன் வடக்கிருத்தல் அரிது. அதனால் அப்பிசிராந்தையார் வருவாரோ என்ற ஐயம் கொள்ளாதீர்கள். அவர் என்னை என்றும் இகழ்தல் இலர்; நற்குணத்தினர்; புகழ் கெட வரும் பொய் வேண்டாதவர்; தன் பெயரை என் பெயராக யாவரிடமும் கூறும் சிறந்த காதற்கிழமையுடையவர். "செல்வக்காலை நிற்பினும் அல்லற்காலை நில்லார். ஆதலின் ஒரு சிறிதும் ஐயுறாது அவர்க்கு இடம் ஒழித்து வைம்மின்" (புறம். 216)

இங்ஙனம் சோழன் உரைக்க, அம்முறையிலேயே பிசிராந்தையார் கேள்வியுற்று அங்கு வந்ததை எண்ணினார் பொத்தியார்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்" (குறள் 785.)

என்ற வள்ளுவர் வாக்கின்படி, சோழன் சொன்னதும், அச்சொல்லை மெய்ப்பிக்க வந்ததுபோல் பிசிராந்தையார் போந்ததும் பொய்கையார்க்கு வியப்புண்டாக்கின. சிறந்த நண்பினனைக் காண வருதல் உலகியல். அவன் இறந்தாங்கே தானும் இறத்தல் அரிது. முன்பின் அறியாத இரண்டு நண்பர்களுள் ஒருவன் இறந்தால் மற்றவனும் இறப்பது அரியதினும் அரியதன்றோ?

"காணுதல் ஒழிக நல்லார் காணினங் கவர்பால் நட்புப்
பேணுதல் ஒழிக பேணிற் பிரிவுறல் ஒழிக உற்றால்
மாணுயர் உடம்பில் வாழும் வாழ்க்கைபோய் ஒழிக என்று
ஊனுயிர் ஒருதாய் நீத்த பார்ப்புஎன உளங்கு மைந்தார்"
(பிரபு. கோர.)

என்ற சிவப்பிரகாசர் வாக்கில் "நல்லாரைக்கண்டு அவர் பால் நட்புக் கொண்டுவிடின், ஒருகால் பிரிவு

நேருமாயின் உயிர் விடுக" என்று கூறியிருப்பதை அறிகிறோம். அங்கு நல்லாரைக் கண்ட பின்னர் பிரிதல் கூடாது என்பது கூறப்பட்டது. நம் பிசிராந்தையாரோ சோழனைக் காணாத நிலையிலேயே அவனைப் பிரிந்ததற்குத் தாம் உயிர் விட்டார் என்னின் அவர்களது நட்பின் திறத்தை என்னென்று உரைப்பது? அதனாலன்றோ, "புணர்ச்சி பழகுதல்" என்ற குறளுக்கு உரை யெழுதி பரிமேலழகர், "கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் போல உணர்ச்சி யொப்பின் அதுவே உடனுயிர் நீக்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும்" என்றார். இங்ஙனம் உணர்ச்சி ஒத்த மாத்திரையானே சோழன் "பிசிராந்தையார் வருவார் இடம் ஒழித்து வைக்க" என்றதும், அது தவறாதபடி அப்புலவரும் வந்ததும் பொத்தியாருக்கு வியப்பைத் தந்தன. அதனால், முன்னிரண்டு வியப்பினைவிட இது மிக்க வியப்பாக இருந்தது. "வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்தன்றே" என்றார் அவர். இங்ஙனமாக வியந்த அவர், இறுதியாக, "தன்னாட்சி செல்லாத அயல் நாட்டில் வாழ்ந்த சான்றோர் நெஞ்சகத்துப் பதிந்த புகழ் வாய்ந்த கோப்பெருஞ் சோழனை இழந்த வுலகம் இனி என்னாவதுவோ" என்றிரங்கினார். இவர் இரங்கிப் பாடியபாடல் வருமாறு :–

"நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே!
யெனைப்பெருஞ் சிறப்பினோ டீங்கிது துணிதல்
அதனினும் மருட்கை யுடைத்தே! பிறனாட்டுத்
தோற்றம் சான்ற சான்றோன் போற்றி
யிசைமர பாக நட்புக்கந் தாக
இனையதோர் காலை ஈங்கு வருதல்;
வருவன் என்ற கோனது பெருமையும்

அதுபழு தன்றி வந்தவன் அறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே!'
அதனால், தன்கோல் இயங்காத் தேயத் துறையும்
சான்றோன் நெஞ்சுறப் பெற்ற தொன்றிசை
யன்னோனை யிழந்தவிவ் வுலகம்
என்னா வதுகொல் அளியது தானே" (புறம். 217)

---

13. கூற்றை விளித்து இறந்தோர்க் கிரங்கல்.

உலகில் இறந்தவரைக் குறித்துப் புலம்புவதை நாம் காண்கின்றோம். இறந்தவரின் நற்செயல்களை யும், நற்பண்புகளையும் அடிக்கடி எடுத்துக் கூறிப் புலம்புவார்கள். அங்ஙனம் புலம்புகையில் தெய் வத்தை இழித்துக் கூறிப் புலம்புதலும் உண்டு. 'தெய் வத்திற்குக் கண்ணில்லையே' என்றெல்லாம் கூறியழுத லைக் கேட்டிருக்கின்றோம். புலவர்கள் புலம்பியதைப் பலர் அறிவர்; அறியாதாரும் உளர். 'கையறுநிலை,' 'இரங்கல்' முதலிய தலைப்புக்களில் இக்காலப் புலவர் பாக்கள் யாத்துப் புலம்புதல் பலரும் அறிந்ததே. இப் புலவர் வழக்கம் இன்று நேற்றல்ல—பண்டு தொட்டே இருந்து வருகின்றது. புறநானூற்றில் பண்டைப் புலவர் பலர் தம் காலத்தில் இறந்த அரசர்களைக் குறித்து இரங்கிப் புலம்பிப் பாடிய பாக்கள் பல உள. அவர்கள் புலம்பிய வகைகளும் பல.

பாரியை யிழந்த கபிலர், பாரியின் பறம்பு மலையை யும், நாட்டையும் கண்டு கண்டு புலம்பி யிருக்கிறார். அதியமான் நெடுமான் அஞ்சியை யிழந்த ஔவையார்

அவன் தனக்குச் செய்த சிறப்புகள் யாவும் கூறிப் புலம்பியுள்ளார். சில புலவர்கள் பாமர மக்கள் எமனை இழித்துக் கூறிப் புலம்புவது போல எமனை யிழித்துப் புலம்பியுள்ளார்கள். அவர்கள் புலம்பிய புலம்பல்களே யீண்டு யாம் எழுதுவனவாகும்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் உறையூரிலிருந்து ஆண்ட சோழ அரசன். 'கிள்ளிவளவன்' என்பது இவன் இயற்பெயர். குளமுற்றம் என்னும் இடத்தில் இவன் இறந்தமைபற்றிப் பின்னர் 'குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்' எனப் பட்டான். இவன் இறந்த காலத்தில் **மாறோக்கத்து நப்பசலையார்** என்ற புலவர் இரங்கிப் பாடிய பாடல் பின்வருவது.

"செற்றன் றாயினும் செயிர்த்தன் றாயினும்
உற்றன் றாயினும் உய்வின்று மாதோ
பாடுநர் போலக் கைதொழு தேத்தி
யிரந்தன் றாகல் வேண்டும் பொலந்தார்
மண்டமர் கடக்குந் தானைத்
திண்டேர் வளவற் கொண்ட கூற்றே"

(புறம். 226)

"திண்டேர் வளவனைக் கொண்ட கூற்றானது, அவனை தன் மனத்திலேயே கறுவு கொண்டோ, வெளிப்படையாக வெகுண்டோ, கைதீண்டி வருத்தியோ உயிர் கொண்டிருக்க முடியாது. அவ்வாறு செய்யின் தான் பிழைத்தல் அரிது. ஆனால், பாடிச் செல்லும் பாணர்போலக் கை தொழுது அவனைப் புகழ்ந்து பாடி அவன் உயிரைப் பரிசிலாக இரந்து பெற்றிருக்க வேண்டும்," என்பது இதன் கருத்து. நப்பசலையார் இதனகத்துத் தன்னரசனின் கொடைப்

பெருமையையும், மறத்தையும் சுட்டி இரங்கியுள் ளமை யறியலாம்.

மேற்கூறப்பட்ட கிள்ளிவளவனின் இறப்பினைக் குறித்து ஆடுதுறை மாசாத்தனாரும் இரங்கிப் பாடியுள் ளார். அவர் கூற்றை விளித்துக் கூறும் முறை, மிக நயமாக உள்ளது. கூற்றை நோக்கி, 'அறியாமை யுடைய கூற்றே'! என விளித்தார். இங்ஙனம் விளித் தற்குரிய காரணத்தை அவரே விளக்கியுள்ளார்.

"கூற்றே! நாடோறும் நின் பசியைத் தீர்த்துக் கொண்டு வந்தான் கிள்ளிவளவன். வீரர்களையும், களிறுகளையும், குதிரைகளையும் போர்க்களத்திலே விழும்படிக் கொன்று நின்பசியைத் தீர்த்து வந்தான். அத்தகையோனை நீ கொன்றாய். இனி நினக்குப் பசி தீர்ப்போர் யாருளர்? நின்செயல் ஆராய்ச்சி யில்லா தது. பிற்காலத்திற் பயன்படுமாறு வைக்கப்பட்ட வித்தினை (விதை நெல்லை) பயன்படுத்திக் கொள்ள வேண்டிய முறையறியாது அவித்து ஒருவன் உண்ணு வதுபோல நீயும், பின்னும் பல்லாண்டிருந்து நின் பசி யைத் தீர்ப்போனை இன்று உண்டொழிந்தாய். எனவே வித்தட்டுண்ணும் அறிவிலியைப் போன் றாய். நான் சொல்லியன யாவும் உண்மையாதலை இனி மேல் காண்பாயாக." இக்கருத்தமைந்த அவரது பாடல் வருமாறு:—

நனிபே தையே நயனில் கூற்றம்!
விரகின் மையின் வித்தட் டுண்டனை.
யின்னுங் காண்குவை நன்வா யாகுதல்
ஒளிறுவாள் மறவரும் களிறும் மாவும்
குருதியங் குரூஉப்புனை பொருகளத் தொழிய

நாளும் ஆனன் கடந்தட் டென்றுநின்
வாடுபசி அருத்திய பழிதீர் ஆற்றல்
நின்னோ ரன்ன பொன்னியற் பெரும்பூண்
வளவன் என்னும் வண்டுமூசு கண்ணி
யினையோற் கொண்டனை யாயின்
இனியார் மற்றுநின் பசிதீர்ப் போரே (227.)

இதனக்த்து "நின்னோரன்ன ....வளவன்" என்றதால், வளவன் மாற்றார்க்குக் கூற்றம் அன்னான் என்றதை விளக்கியுள்ளார். அன்றியும் அவன், 'நின் பசியைத் தீர்த்தது போன்றே உலகினர்க்கும் பசியைத் தீர்த்து வந்தான்' என்றும் குறிப்பால் பெறவைத்தார். இப்புலவர் பெருமான் இரங்கியது போன்றே அதியமான் தகடூர் பொருது வீழ்ந்த எழினியை அரிசில் கிழார் பாடி யிரங்கியுள்ளார்.

"ஏ கூற்றமே! ஈன்றதாயால் கைவிடப்பட்ட பாலுண்ணாத குழந்தையைப்போல தன்னை நம்பிய சுற்றம் ஆங்காங்குக் கிடந்து துன்புறவும், பசி வருத்த அதனால் கலங்கித் துயருறும் நெஞ்சத்துடன் வருந்திக் கிடந்த இவ்வுலகத்தினும் மிக மிகத் துன்பம் எய்தும் அளவில் நீ நினது இன்பத்தினை இழந்தாய். தளர்ந்த குடியை உடைய ஒருவன் பின் விளைந்து பயன்தரும் வித்தினை அவித்துண்டதுபோல நீ எழினியை உண்டாய். அவன் ஒருவனது ஆருயிரை உண்ணாயாயின் அவனின் பகைவரது பல உயிரையும் போர்க்களத்தில் அவன்தர உண்ணுவாய். அத்தகைய இன்பத்தை இழந்தாய்" என்றிரங்கினர்.

"ஈன்றோள் நீத்த குழவி போலத்
தன்னமர் சுற்றம் தலைத்தலை யினையக்

கடும்பசி கலக்கிய இடும்பைகூர் நெஞ்சமொடு
நோயிழந்து வைகிய வுலகினும் மிகநனி
நீயிழந் தனையே அறனில் கூற்றம்!
வாழ்தலின் வரூஉம் வயல்வளன் அறியான்
வீழ்குடி யுழவன் வித்துண் டாஅங்கு
ஒருவன் ஆருயிர் உண்ணு யாயின்
நேரார் பல்லுயிர் பருகி
ஆர்குவை மன்னோ அவன் அமரடு களத்தே.'(230)

என்ற அவர் வாக்கைக் காண்க.

வன்பரணர் பாடியதாக ஒருபாடல் காணப்படுகின்றது. வன்பரணரால் பாடப்பட்டோர், நள்ளி, ஓரி என்ற வள்ளல்கள் என்று புறநானூற்றால் அறிகின்றோம். "ஐயோ எனின்யான்" என்னும் புறப்பாடல் யாரைப் பற்றியது என்று புலப்படவில்லை. இப்பாடல் கணவனை யிழந்த மனைவி கூறும் கூற்றில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட வள்ளல்களுள் ஒருவன் போரில் இறக்க அவன் மனைவி கூறிய கூற்றாக வன்பரணர் பாடினரோ எனவும் கொள்ளலாம். அல்லது போரில் இறந்த ஒரு வீரன் மனைவி கூறியதாகப் பாடினரோ எனவும் கொள்ளலாம். பாடலின் போக்கை நோக்குகையில், காட்டு வழியே காதலர் செல்வுழி இடையில் காதலன் இறக்கக் காதலி புலம்பியதாகவும் கொள்ளலாம்.

"ஐயோ எனின்யான் புலியஞ் சுவலே
யணைத்தனன் கொளினே யகன்மார் பெடுக்கவல்லேன்
என்போற் பெருவிதிர்ப் புறுக நின்னை
யின்னா துற்ற வறனில் கூற்றே
நிரைவளை முன்கை பற்றி
வரைநிழற் சேர்க நடத்திசிற் சிறிதே (255.)

இறக்கும் நிலையில் இருக்கும் தன் கணவனை நோக்கிக் கூறினாள். மடந்தை. "நீ கிடக்கும் இந்நிலை கண்டு 'ஐயோ' என்று அரற்றுவேனானால் யான் அரற்றிய ஒலியைக் கேட்டு அவ்வழியாகவே அண்மையில் இருக்கும் புலி வந்து நின்னுடம்பையேனும் யான் காணப்பெறாமல் துன்பம் செய்யுமே என்று புலிக்கு அஞ்சுவேன். அங்ஙனம் அரற்றாமல் மெல்லத் தூக்கி, அணைத்த வண்ணமாகச் செல்லலாம் என்றாலோ நினது அகன்ற மார்பகத்தை எடுக்க வல்லேன் அல்லேன் யான் எத்தகைய துயருறுகின்றேனோ அத்துயர் உறுவதாக அறனில்லாத கூற்றம். நிழலற்ற இவ்விடத்திருப்பதைவிட்டு மலையின் நிழற்கண் செல்வோம். வளையல் நிரைந்த எனது முன் கைப்பற்றி மெல்ல நடப்பாயாக" இது அவள் கூற்று.

கூற்றினை விளிக்காது "கூற்று என்போற் பெரு விதிர்ப்புறுக" என்று கூறினாள். "ஐயோ எனின் யான் புலியஞ்சுவலே" என்றதை நோக்குமிடத்து, கணவன் இறந்த இடம் ஒரு காட்டுவழி என்பது புலப்படும். போர்க்களத்துக்கண் கணவன் மாய்ந்தான் எனின் ஆண்டுப் பல வீரர்களும் மாய்ந்திருப்பர். அவரவர் மனைவியர் தாயர் முதலியோரும் ஆண்டுப் போந்து துயருறுதலோ, மகன் மார்பகத்து வேலேற்று மாய்ந்து கிடப்பது கண்டு மகிழ்தலோ செய்வர். போர்க்களம் ஒரே அமளியாக இருக்கும். அதனால் இவள் புலிக்கு அஞ்சவேண்டுவதில்லை. அனைத்துப் பேரொலியும் அடங்கிய பின்னர் தனித்துத் தன் கணவனைக் கண்டவள் கூற்றாகக் கொள்ளலாமோ எனின் அவள் காணுமளவும் அவன் உயிருடன் இருந்தான் என்றல் அமையாது. அன்றியும் குற்றுயிருடன்

இருக்கும் வீரனை அவன் படையினர் வாளாவிட்டுப் போக மாட்டார்கள் அன்றே? "வரை நிழற் சேர்கம் நடத்தி சிற்சிறிதே" என்றதால் அவன் உயிர் ஊசலாடிய நிலையில் இருந்தது என்பது பெறலாம். எனவே காட்டகத்துக் கணவனை யிழந்த காதலியின் கூற்றுக்க் கொள்ளலாம். நனிமிகு சுரத்திடைக் கணவனை யிழந்து, தனிமகள் புலம்பிய முதுபாலைக்கு (தொல். புறம். சூ. 19.) இளம்பூரணர் இதனை எடுத்துக் காட்டியுள்ளார். அறிஞர்கள் ஆராய்ந்து முடிவு கட்டவேண்டியது இது.

---

14. பிசிராந்தையாரின் சொற்றிறன்

பிசிராந்தையார் பாண்டிய நாட்டுப் பிசிர் என்னும் ஊரினர் என்பதும், கவலையின்றி வாழ்ந்தவர் என்பதும், சோழ நாட்டரசன் கோப்பெருஞ் சோழன் என்பானிடம் காணவிடினும் உள்ளத்தால் நட்புக் கொண்டிருந்தவர் என்பதும் முன்வந்த கட்டுரைகள் சிலவற்றில் ஆங்காங்குக் காட்டப்பட்டுள. தம் நண்பனாகிய கோப்பெருஞ் சோழனைக் காணவேண்டிப் பல்கால் முயன்றும் வாய்ப்பில்லாது போகவே மிகவும் வருந்திக்கொண்டிருந்தார். இவரது வருத்தம் கணவன் வினைமேற் பிரிய மனைவிக்குரிய வருத்தத்திற்கு ஒப்பாயிற்று. ஒருநாள் மாலையில் இவர் தம் நண்பனை நினைந்து காண இயலாமைக்கு வருந்திச் செயலற்று நின்றார். அவ்வேளை அன்னச்சேவல் ஒன்று தன் பேடையுடன் செல்வது கண்டார். கண்டதும் அதனை விளித்துப் பின்வரும் பாடலைக் கூறினார்.

அன்னச் சேவல்! அன்னச் சேவல்!!
ஆடுகொள் வென்றி யடுபோ ரண்ணல்

நாடு தலை யளிக்கும் ஒண்முகம் போலக்
கோடுகூடு மதியம் முகிழ்நிலா விளங்கும்
மையல் மாலையாங் கையறு பினையக்
குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை யாயின் இடையது
சோழ நன்னாட்டுப் படினே கோழி
உயர்நிலை மாடத்துக் குறும்பொறை யசைஇ
வாயில் விடாது கோயில் புக்கெம்
பெருங்கோக் கிள்ளி கேட்க இரும்பிசிர்
ஆந்தை யடியுறை யெனினே மாண்டநின்
இன்புறு பேடை யணியத்தன்
அன்புறு நன்கலம் நல்குவன் நினக்கே. (67)

"அன்னச் சேவலே! வெற்றியையுடைய சோழன் தன் நாட்டைச் செங்கோல் முறைப்படித் தலையளி செய்யும் காலத்தில் விளங்கும் முகம்போல நிறைமதி விளங்கும் இம் மாலைக் காலத்தில் யான் செயலற்று ஏங்க, நீ குமரியாற்றில் நீராடி அயிரைமீன் மாந்தி இமயமலையை நோக்கிச் செல்வையாயின், இடையி லுள்ள சோழநாடு செல்லின், உறையூர் உயர்நிலை மாடத்து நினது பேடையுடன் தங்கி இளைப்பாறிப் பின் வாயில் காவலன் உட்புக விடவேண்டாதே அரண் மனையைக் குறுகி எம்பெருங்கோவாகிய சோழன் கேட்ப, 'யான் பிசிராந்தையாரின் அடிக்கீழ் வாழ் வேன்' என்று கூறுவாயாயின், கற்பின் மாண்ட நின் மனைவி யணியத்தக்கவாறு தன் கலன்களை நினக்குக் கொடுப்பான்" என்பது இதன் பொருள்.

அன்னச் சேவலிடம் நம் புலவர் கூறிய முறை மிக வியக்கத் தக்கதாக உள்ளது. குமரித்துறையில் நீராடி வடக்கு நோக்கிப் பறந்து செல்வதால் "அன் னச் சேவல் அன்னச் சேவல்! என இருமுறை விளித் தார். பின்னர் தமது செய்தியைச் சொல்ல நினைத்

தவர் தாம் சொல்லியனுப்புதற்குரிய காரணத்தை முதற்கண் குறிப்பாகக் கூறினர்; கையறுபு இனைய'' என்றதால் தம்முடைய வருத்தத்தைத் தெரிவித்தார். அவ் வருத்தமும் பிரிந்த காதலர்களிடையே தோன்றும் வருத்தம் போன்றது என்பதற்கு 'மாலை' என்று கூருமல் 'மையல் மாலை' என்று கூறினர். பிரிந்தோர்க்கு மயக்கத்தைச் செய்யும் மாலை என்பது அதன் பொருள். எனவே தாமும் ஒருவனைக்காணுத நிலையில்—பிரிவு நிலையில் துயருறுவதாகக் குறித்தார். தமக்காக அவ்வன்னம் செல்லவேண்டுவதில்லை யென்பார் "குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி வடமலைப் பெயர் குவையாயின்'' என்றுர். ஒருவர் தம்காரியமாக ஓரிடம் செல்லும்போது பிறர், தமது காரியத்தையும் பார்த்துவரச் செய்வது உலகியலன்றே? அம்முறையிலேயே புலவரும் சொல்லியனுப்பினர். குமரியயிரை மாந்தி வடமலைப் பெயரும் அன்னம் நேராக வடமலை நோக்கிச் செல்ல இயலாது, இடையில் தங்கியே செல்லவேண்டும். இடையில் உள்ள நாடுகள் பல. அவற்றுள் ஒன்று சோழ நாடு. அந்நாட்டை யடைந்தால் மற்ற ஊரில் தங்காமல் உறையூரில் தங்குக என்பார் "இடையது சோழ நன்னுட்டுப்படினே கோழி (உறையூர்), உயர்நிலை மாடத்துக் குறும்பறை (பேடை) அசைஇ'' என்றுர். பறந்து செல்லும் நிலையிலேயே சோழனை அடைந்து 'பிசிராந்தை அடியுறை' என்றுல் அவன் புலவருக்கு ஏதோ தீங்குண்டு என எண்ணுதலும் கூடும். அதனுல் பறந்து சென்ற களைப்பு நீங்கிச் செல்க என்பார், 'அசைஇ' என்றுர். களைப்பு நீங்கிச் செல்லின் அரண்மனை வாயில் காவலர் தடுப்பரோ என்ற ஐயம் வேண்டுவதில்லை; அவர்கள் இவர் பகை

வர் இவர் இரவலர், புலவர்எனக் குறிப்பின் உணர்ந்து உட்புகுமாறு வாளா இருப்பர். அதனால் உனக்கு யாதொரு தடங்கலும் இல்லை யென்பார் "வாயில் விடாது" (வாயில்கள் விடவேண்டாமலே) என்றார். உட்புகுங்கால் மரியாதையுடன் செல்லவேண்டும் என் பார் 'கோயில் புக்கு' என அரசன் இல்லம் என்பதை நினைவுபடுத்தினர். சொன்னால் தவறாது மகிழ்ந்து தருவன்; அவன் எனக்கு மிகவும் வேண்டியவன் என் பார் "எம்பெருங்கோக்கிள்ளி" யென்றார். செய்தி கூற வேண்டாது என் பெயர் மட்டும் கூறின் அமை யும் என்பார் "பிசிராந்தை அடியுறை யெனின்" என்று கூறிவிட்டார். நின் இன்புறு பேடை, கணவ னாகிய நின்வழி யொழுகற்பாலது ஆதலின், நின் செலவை மறுத்து இடையூறு செய்யாது என்பார் 'மாண்டநின் இன்புறு பேடை' என்றார். அன்றியும் அவன் நல்கும் கலனும் பேடையணியத் தக்கன வாத லின் அது இடையூறாக இராது. அவன் புலவர்ப் புரக்கும் வன்மையுடையனாதலின் 'நல்குவன்' என்றார்.

இங்ஙனமாக நாம் நயங் கண்டு மகிழுமாறு அமைந்த புலவரின் சொற்றிறத்தை என்னென்பது? உலகில் ஒருவரை ஒருவர் ஒரு காரியஞ் செய்து தர வேண்டுமிடத்து அவர்கள் மறாது ஏற்றுச் செய்யும் முறையில் அவரை வயப்படுத்திப் பேசும் இயல்பைக் காணலாம். அம்முறையில் புலவர் அன்னச்சேவலை வயப்படுத்திக் கூறியுள்ளார். கூறும் அன்னத்திற்கு கிடைக்கும் பரிசையும் கூறினர். இங்ஙனமே இவ ரியற்றிய பாக்கள் ஒவ்வொன்றும் நயமுடையனவாக உள்ளன. படித்துப் படித்து மகிழ்தற்குரியன.

MADURA TAMIL SANGAM